1271

ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்

127
23 JUN 1958
MADRAS
3L
ஊரசு,M22 SW
M36.13.5
(82987)

வருட சந்தா ரூ 1/8
தனி காபி அ 2

"ஜகன்மோகினி" ஆபிஸ்
28, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

மலர் 13
இதழ் 5

எஜெண்டுகள் தேவை.

ஒவ்வொரு ஊரிலும் எமது 'ஜகன்மோகினி'யை விற்பனை செய்ய செல்வாக்குள்ள எஜெண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு உடனே எழுதவும்.

ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு ஆரம்பம்	மாதாந்த நாவல் சஞ்சிகை.	ஜனவரி 1936

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.

எல்லா பத்திரிகை விற்பனையாளரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8	ஜீவிய சந்தா ரூ. 25	தனிப்பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

வெளி நாட்டு சந்தா நேயர்களே!

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளி நாட்டினருக்காகச் சந்தாவை அதிகமாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்று தான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணா தபாற் செலவில் அனுப்பும் பத்திரிகையை வெளி நாட்டிற்கு அனுப்ப முக்காலணா ஆவதால் நமக்குச் செலவு அதிகமாயினும், தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரிகையைப் படிக்க சௌகரியமளிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை அதிகரிக்கவில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பி உங்களுக்கு வேண்டிய இனாம் புத்தகங்களை பெற்றுக்கொள்வதுடன் நமக்கு ஆதரவளிக்கக் கோருகிறோம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

விசேஷ அறிவிப்பு

நமது விளம்பர விகிதம்.

1 பக்கத்துக்கு ஒரு முறை	ரூ.	10	0	0
½ ப்க்கத்துக்கு ,,	,,	5	8	0
¼ பக்கத்துக்கு ,,	,,	3	0	0
கடைசி பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	10	0	0
முதற்பக்க உள்ளட்டைக்கு ,,	,,	12	0	0

விசேஷ விளம்பரங்கள்

சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் கதைக்குக் கீழ் 1 வரி விளம்பரச் செய்தி போட ஒரு முறை	ரூ.	0	8	0
ஒரே காலத்தில் 48 வரிகள் 1 சஞ்சிகையின் 1 வெளியீடு முழுவதிலும் போட ஒரு முறை	,,	20	0	0
கதை முடியும் அத்தியாயங்களின் இறுதியில் 1 பக்கத்தில் அநுமதிக்க ஒரு முறை	,,	15	0	0

நீண்டகால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். ஸினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிரதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு நேரே விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	**இனமாக நாவல்கள் வேண்டுமா ?**	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் கதியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தான் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின்கனி சாருலோசனை	**ஒன்று இனம்**	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ் திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

எழுதிய நாவல்கள்.

“ஜகன்மோகினி” சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை

	ரூ.	அ.	ரூ.	அ
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	2	0
சாருலோசனு (2 பாகங்கள்)	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கோடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பக்ஷமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுணபூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

தென் இந்தியா மோட்டார் பாடசாலை

(1916-ஆ ஸ்தாபிக்கப்பட்டது)

3 மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும் பூட்டவும், எலக்ட்ரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களைச் செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்டு லைசென்சும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சி பெற்றால் ரூ. 35 முதல் 100-வரையிலும் பெறலாம்.

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்

அதன் அநுபோக பயிற்சி முறையும் (50 படங்களுடன்)

விலை ரூ. 2. புஸ்தகம் வேண்டுபவர்கள் 2—6—0 முன்பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளவும். (தபால் செலவு 0—6—0) விபரத்துக்கு கீழ்க்கண்ட ஆபீஸ்களுக்கு எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

தென் இந்தியா மோட்டார் எஞ்ஜினீரிங் ஒர்க்ஸ் அண்டு பாடசாலை

மயிலாப்பூர், P. O. சென்னை.

வாங்கிப் படியுங்கள் ! **ஆடல் பாடல்** சினிமாப் பிரியர்க்கோர் நல்விருந்து !

ஓர் சிறந்த சினிமா சங்கீத வாரப்பத்திரிகை — சனிக்கிழமைதோறும் வெளிவருகின்றது.

சினிமா, சங்கீதம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகளைப்பற்றிய கட்டுரைகள், ஆடல் பாடல் பிரமுகர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், ஆடல் பாடல் செய்திகள், பேசும் படங்களைப் பற்றிய விமர்சனங்கள் முதலியனவும், மற்றும்

'பிரேமாவதி' என்ற தொடர் நவீனமும் கொண்டு நல்ல கிளேஸ் பேப்பரில் அழகிய படங்களுடன் பிரசுரமாகி வருகின்றது.

தனிப்பிரதி விலை அணா 0—0—6. வருடசந்தா ரூ. 2—0—0

எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

"ஆடல் பாடல்" முதல் மலர். (1935ம் ஆண்டு வெளி வந்த இதழ்களையும் ஆண்டு மலரையும் சேர்த்தது காலிகோ அட்டையுடன் பயிண்டு செய்யப்பட்ட அழகிய புத்தகம்) ஒவ்வொரு கலாரசிகனும், பெறவேண்டியதவசியம்.

விலை ரூபாய் 1—8—0 தபால்செலவு பிரத்தியேகம்.

வேண்டுவோர் முன்பணமாக அணா 0—8—0 அனுப்புங்கள்.

"ஆடல் பாடல்" ஆபீஸ், 6 சுங்குராம செட்டி தெரு, சென்னை.

உலக அனுபவங்களைக் கண்டபடி எழுதுவதில் அன்றும்
இன்றும் ஒப்புயர் விலாத ஆசிரியர்

காலஞ்சென்ற ஸ்ரீமான் S. G. இராமானுஜலு நாயுடுகாரு

எழுதிய அபூர்வ புத்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
ஹம்ஸதேவி	0	3	பதினெட்டாம் பாஷை	0	௮
கங்காதரன்	0	3	பன்னிரு மரகதங்களின் மர்மம்	3	0
சரஸ்வதி	0	9	விசித்திர துப்பறியும் கண்	3	0
பாலிகா கல்பகம்	0	6			

ஸ்ரீமான். J R. ரங்கராஜு காரால் எழுதப்பட்ட நிகரற்ற

துப்பறியும் நாவல்கள்

	ரூ.	அ.		ரூ.	அ
இராஜாம்பாள்	0	12	இராஜேந்திரன்	1	0
சந்திரகாந்தா	0	12	வரதராஜன் (2 பாகம்)	2	0
மோஹன சுந்தரம்	0	12	விஜயராகவன்	1	0
ஆனந்த கிருஷ்ணன்	0	12	ஜெயரங்கன்	1	8

ஸ்ரீமான் வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

எழுதிய நாவல்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ணசந்திரோதயம்	7	8	வஸந்தமல்லிகா	1	8
சௌந்தர கோகிலம்	6	0	இராஜேந்திரமோஹனா	1	4
மாயாவிநோதப் பரதேசி	5	0	வஸந்தகோகிலம்	1	4
திகம்பரசாமியார் பால்யலீலை	5	0	வித்யாசாகரம்	1	4
மதன கல்யாணி	4	8	முத்துலக்ஷ்மி	1	4
மிஸிஸ் லீலாமோஹினி	3	0	நீலலோசனி	1	2
மேனகா	3	0	கலியாணசுந்தரம்	1	2
கும்பகோணம் வக்கீல்	3	0	நங்கை மடவன்னம்	1	2
விலாசவதி	3	0	சிங்கார சூர்யோதயம்	1	2
மன்மதபுரியின் மூடுமந்திரம்	2	12	மிஸ்டர் பூச்சாண்டி எம்மே	1	2
கனகாம்புஜம்	2	12	டாக்டர் சோணாசலம்	1	2
பாலாமணி	2	8	சோமசுந்தரம்	1	2
தில்லைநாயகி	2	4	பச்சைக்காளி	1	2
துரைக்கண்ணம்மாள்	2	4	சமயசஞ்சீவி	1	2
சதானந்தபோதகசாமியார்	2	4	சொக்கன் செட்டி	1	2
பன்னியூர் படாடோபசர்மா	2	4	பூஞ்சோலையம்மாள்	1	2
திருபுரசுந்தரி	2	0	மாயாசுந்தரி	0	12
லக்ஷ்மீகாந்தம்	2	0	திவான்லொடபடசிங்	0	12

20-வது அதிகாரம்

வீராங்கனையின் தீரம்—பேராசை பெரு நஷ்டம்

(8298).

ஜானகியின் நாத்தனர் திடீரென்று வந்து நின்றதைக் கண்டு திகைத்துவிட்ட ருக்மணி "இவளுடன் என்ன பேசுவது? எவ்விதம் உபசரிப்பது? கல்யாண காலத்தில் பார்த்ததற்குப் பிறகு இதுபரியந்தம் பார்க்காதவள் திடீரென்று எதற்காக வந்திருக்கிருள்?" என்று க்ஷண நேரம் பிரமித்து நின்ருள். அடுத்த க்ஷணம் தன் மாறுதலைக் காட்டிக்கொள்ளாமல் ருக்மிணி "வாம்மா உட்காரு! எப்போது வந்தாய்? ஏது! உன் வரவு மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறதே! எங்கள் ஞாபகம்கூட உங்களுக்கிருக்கிறதா! அம்மா, அப்பா தம்பி எல்லோரும் சவுக்யமா! உன் குழந்தைகள் சுகமா! நீ மலேயாவிலிருந்து எப்போது வந்தாய்! உன் புருஷன்கூட வந்திருக்கிருரா?" என்று வெகு வினயமாய்க் கேட்டாள்.

இதைக் கேட்ட விஜயவல்லி "என்ன மாமீ! ஞாபகமிருக்கிறதாவென்று கேட்கிறீர்கள்? ஞாபகமில்லாது மறந்துபோய்விடுமா! நான் மலேயாவிலிருந்து வந்து நான்கு நாட்கள்தானுகிறது. ஜானகியை கல்யாணத்தில் பார்த்ததாயிற்றே! மீண்டும் பார்க்கவேண்டும் என்கிற ஆவல் அதிகமாயிருந்தது. அதனுல் வந்தேன். ஜானகி எங்கே! உடம்பு சவுக்யமாயிருக்கிருளா? ஜானகி! ஜானகி! வாம்மா" என்று கூப்பிட்டாள்.

திருடனுக்குத் தேள் கொட்டியது போலத் தத்தளிக்கும் ருக்மிணிக்கு இவள் கூப்பிடுவதானது வயிற்றில் சங்கடமும் பாம வேதனையும் செய்கிறது. எந்த விதமாக ஜானகியைப் பற்றிக் கூறுவது என்ற திகில் பிடித்துக்கொண்டது. எனினும் கேள்விக்குப் பதில் கூறியாக

வேண்டுமாகையினால் உடனே தன் முகக் குறியை சமாளித்துக் கொண்டு "ஜானகிக்கு உடம்பு சரி இல்லை. உள்ளே படுத்திருக்கிறாள்." என்று கூறியபடியே உள்ளே அவளை யழைத்துக்கொண்டு சென்றாள்.

ஜானகி ஸ்மரணையற்று கட்டிலோடு கட்டிலாக ஒட்டிக் கொண்டு படுத்திருக்கிறாள். அவளுக்கேற்பட்ட பயத்தின் மிகுதியினால் முகத்தில் வியர்வை முத்து முத்தாக அரும்பி ஓடுகிறது. வெளுத்துத் துரும்புபோல் கிடக்கும் அவள் மேனி துவண்டு சவத்திற்கு ஒப்பாக இருப்பதைப் பார்த்தால் ருக்மிணியின் வயிற்றில் இடி இடித்துவிட்டது.

விஜயவல்லிக்கு ஜானகி படுத்திருக்கும் காட்சி உண்மையில் மனத்தைத் தாக்கியது. ஜானகியின் பக்கலில் அமர்ந்து அவள் முகத்தில் வழியும் வியர்வையைத் தன் தலைப்பால் துடைத்து அருகிலிருந்து விசிறியினால் விசிறியவாறு "அம்மா! ஜானகீ! ஜானகீ! எழுந்திரு! ஏன் இப்படி மயக்கம் வந்துவிட்டது. மாமீ! கொஞ்சம் காப்பி கொண்டுவாருங்கள்" என்றாள்.

ருக்மிணிக்கு விஜயாவின் செய்கை மிக்க ஆச்சரியமாயும் நம்பக் கூடாததாயுமிருக்கிறது. சூடாகக் காப்பியைக் கொண்டுவந்து கொடுத்தாள். விஜயாவே ஜானகியை அதை பருகச்செய்த பின்னர் சிறிது நேரஞ் சென்று ஜானகி கண்ணைத் திறந்தாள். தன்னருகிலேயே தன்னை அணைத்துக்கொண்டே தன் நாத்தி உட்கார்ந்திருந்ததைக் கண்டு தூக்கி வாரிப்போட்டது. சுருட்டி மடக்கிக்கொண்டு எழுந்திருக்க முயற்சித்தாள்.

விஜயவல்லி அவளைத் தடுத்து "போதும்! போதும்!" எனக்கு மரியாதைகள் வேண்டாம். நீ படுத்திரு. உன்னுடைய இந்த நிலைமையில் மரியாதைதான் பாக்கி! படுத்திரு...என்று கூறியபடியே ஜானகியை அமர்த்திப் படுக்கவைத்தாள். இச் செய்கை எல்லோரையும் ப்ரமிக்கச் செய்தது. ஜானகிக்கு என்ன பேசுவது, என்ன செய்வது என்றே தெரியவில்லை. தன்னுடைய ரகஸ்யத்தைத் தெரிந்துகொண்டு சோதிப்பதற்கே வந்திருக்கிறாளோ! என்ற திகில் மட்டும் வாட்டுகின்

றது. ஜானகி கண்ணில் நீர் பெருகியவாறு "அக்கா! அக்கா!" என்று கூப்பிட்டு அவளிரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விம்மி விம்மி யழுதபடியே "அக்கா! நீங்கள் நினைக்கிறபடி நான் குற்றவாளியல்ல. நிரபராதி. கடவுள்மீது ஆணையாக நான் குற்ற மற்றவள்." என்று திணறித் திணறிக் கூறினுள்.

இதற்குள் விஜயவல்லி இடைமறுத்து ஜானகியை தன் மடியில் சாத்திக்கொண்டு "ஜானகி! ஜானகி! நீ கவலைப்படாதே! பயப்படாதே! நானும் உன்னைப்போன்ற ஓர் பெண் உருவந்தான். நானும் உன்னைப்போன்ற மூன்று பெண்களைப் பெற்றிருக்கிறேன். நான் ஏதோ வித்யாசமாக எண்ணி உன்னைச் சோதிப்பதற்காக வந்திருக்கிறேன் என்று நினைக்காதே! எனக்கு மருமகன் பிறக்கப்போகிறுன் என்ற சந்தோஷத்தில் அபாரமாக நான் மிதக்கிறேன். ஜானகி! உனக்கு இதுபரியந்தமிருந்த சோதனைக் காலங்கள் விலகிவிட்டதாக எண்ணித் தேறு. பயப்படாதே! நான் உனக்குப் பசப்பு வார்த்தைகளைக் கூறவில்லை. உண்மையிலேயே கடவுள்மீதாணையாகக் கூறுகிறேன். கண்ணீர் விடாதே! உன்னுடைய பரிதாபத்தை யறிந்துதான் உன்னைத் தேற்றும்பொருட்டு நான் வந்தேன். கவலைப்படாதே!" என்று கூறியபடியே ஜானகிக்குச் சைத்யோபசாரம் செய்தாள்.

இம்மாதிரி இவள் சொல்லுவாள் என்று ருக்மிணியாவது ஜானகியாவது கனவில்கூடக் கருதவில்லை யாதலால் அவர்கள் இம்மொழியைக் கேட்டவுடன் தம்மையே மறந்து "ஹா!.... இப்போது நாங்கள் கேட்பதும் காண்பதும் கனவா! நினைவா!....கடவுளின் கருணைமாரியின் காற்று! ஹா! விஜயவல்லி! கடவுள் உன் மூலமாக ஜானகிக்குக் கிருபை செய்யக் காத்திருந்தார்போலும்...என்று மேலே சொல்லமாட்டாது ருக்மிணி விஜயவல்லியைத் தழுவிக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டாள்.

ஜானகிக்கோ, வாடி வதங்கி எரிந்துபோகக்கூடிய நிலைமையிலுள்ள பயிருக்கு திடீரென்று மழை பொழிந்து உயிர் கொடுத்ததேபோல தன்னுடைய உயிர் போகும் நிலைமையில் தனக்கு ஜீவாமிருதம் கொடுத்துத் தன்னைப் பிழைப்பிக்க வந்த தன்வந்திரியா

கவே' விஜயவல்லியின் வார்த்தையும் செய்கையும் தோன்றின. அவளுடைய அப்போதுள்ள உணர்ச்சியினுல் அவள் ஏதும் பேசமாட்டாமல் கண்ணீர் மட்டும் வழிய விஜயவல்லியை இறுகத் தழுவிக் கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள்.

இவர்களுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு விஜயாவின் மனம் இளகி உருகியது. அவள் தனது பரிசுத்தமான அன்பைக் காட்டி ருக்மணியையும் ஜானகியையும் தேற்றி "ஜானகி! இன்ளுேடு இக் கவலையை விட்டு ஒழி. நான் உன் கல்யாணங் கழித்த மறு தினம் ஊருக்குச் சென்ற பிறகு இங்கு இத்தனை அமர்க்களங்கள் நடந்ததை நான் அறியமாட்டேன். ஊராருக்கெல்லாம் உன்னைப் பற்றி என்ன சொன்ஞர்களோ, அதே செய்தியை என் பெற்ளுேர்களாகிய பேராசைக்காரர்கள் எழுதிவந்தார்கள். அதையே நானும் உண்மையென நம்பி வந்தேன். கூறத்தகாத அபாண்டங்களையெல்லாம் உன்மீது கூறும்படி அவர்களுடைய மனம் எவ்வாறு துணிந்தது என்று இப்பொழுது வியந்து தவிக்கின்றேன்.

அயல்நாட்டுக்குச் சென்று இத்தனை வருடங்களாகிவிட்டபடியால் எல்லோரையும் பார்க்கவேணும் என்னும் ஆவல் என்னை அதிகமாகத் தூண்டியது. அதோடு என் பெண்ணுக்கும் கலியாணம் செய்யவேண்டிய வயது—காலம்—சமீபித்துவிட்டதால் நல்ல வரனைத் தேடி கலியாணத்தைச் செய்துகொண்டு பத்மநாபனுக்கும் ஒரு நல்ல பெண்ணை விவாகம் செய்துவிட்டுப் போகவேண்டுமென்றே நான் வந்தேன். நான் வந்து 2 தினங்கள்தான் ஆகின்றன. வந்த மறு தினமே கண்ணீரும் கம்பலையுமாக நீ எழுதியிருந்த கடிதத்தை என் பெற்ளுேருக்குத் தெரியாமல் நானே உடைத்துப் பார்த்தேன். என் மனம் என்னையறியாமல் தத்தளித்தது. உண்மை இவ்வாறிருக்க பெண் வீட்டாரைக் கொள்ளையடிக்கும் பணப்பேராசையின் காரணமாக நிரபராதியான ஒரு பெண்மீது இத்தகைய அபாண்டத்தைக் கற்பனை செய்து அதை உண்மைபோல் ஊரெங்கும் பரவச்செய்து ஒரு குடும்பத்தையே நாசம் செய்துவரும் என் பெற்ளுேர்களின் மீதே அடங்காத ஆத்திரமுண்டாகிவிட்டது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்னும் மூதுரையை அடியோடு மறந்து,

அவர்களை வயிறெரியத் திட்டும்படியாகச் செய்துவிட்டது. பெண் பாவம், பெண் வதை என்பதைக்கூட மறந்து கொடிய மிருகம் போன்று இருக்கின்றார்களே என்று மனம் நொந்தேன். படித்தும், அறிவு இருந்தும், முட்டாளாகிய பத்மநாபனும் உடந்தையாக விருந்ததை நினைக்க இன்னும் ஆத்திரம் பொங்கி யெழுந்தது. இக் கடிதத்தை என் பெற்றோருக்குக் காட்டி அவர்களை அலறச்செய்யலாகுமா வென்றும் நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்வதால் காரியம் கெட்டுவிடும் எனத்தோன்றியது. ஆகையினால் என்னுடைய ஆத்திரங்களையெல்லாம் அடக்கிக்கொண்டு பெண்ணாகிய நானே ஆணாக மாறினேன்.

எப்படியெனில், உடனே தபாலாபீசுக்குச் சென்று பத்மநாபனுக்கு அவசரமாக இவ்விடத்திற்கு வரும்படியாக ஒரு தந்தி கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தேன். அப்பொழுது என் பெற்றோர்கள் என்னுடைய ஒன்று விட்ட சித்தப்பாவிடம் பேசிக்கொண்டிருந்த அக்கிரமத்தைக் கேட்டதும் நெருப்பை மிதித்தவள்போலானேன்; அதற்குமேல் என்னால் பொறுமை வகிக்க முடியவில்லை. அச் சம்பாஷணையை முழுவதும் அறியும் பொருட்டு அவ் விடத்திலேயே நின்றேன். என் சித்தப்பா ஓர் மந்திரவாதி. அவரைக் கொண்டு உங்கள் குடும்பத்திற்கே சூன்யம் வைத்து ஜானகியின் தகப்பனாருக்குப் பைத்தியம் பிடிக்கும்படியாகச்செய்து குடும்பத்தை அல்லகல்லோலப்படுத்திவிடவேண்டுமென்றும், அதற்காக அவருக்குப் பணம் கொடுப்பதாகவும் முடிவு செய்தார்கள்.

அப்பொழுதும் நாம் ஆத்திரப்படக்கூடாது என்று என்னை சமாளித்துக்கொண்டேன். நேரே என்னுடைய சித்தப்பா வீட்டிற்குச் சென்று சித்தியை அழைத்து அவளுக்கோர் பெரிய காப்ரா மூட்டையை அவிழ்த்தேன். அதாவது, "நான் உனக்கு நல்லதைச் சொல்லுவதற்காக வந்திருக்கிறேன். அதை நீ பயப்படாமல் நம்பவேண்டும். உன்னுடைய புருஷா முன்பு கடன் வாங்கியிருப்பது உனக்கு ஞாபகமிருக்கலாம். அதை அவர் இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லையென்று உனக்குத் தெரியும். அவர்மீது கடன்காரர்கள் வாரண்டு பிறப்பித்திருக்கிறார்கள். இச்சமயம் அவரை நீ

விடாமல் புதுச்சேரிக்கு அழைத்துக் கொண்டு தலைமறைவாகச் சென்று விடுவாயானால் பிழைக்க வழியுண்டு; இல்லையேல் கட்டாயம் அவமானமும் ஆபத்தும் நேரும். இந்த ரகஸ்யத்தை நான் உன்னிடம் தெரிவித்ததை வெளியில் ஒருவரும் அறியக்கூடாது. உன் புருஷன்தான் மந்திரவாதியாயிற்றே. கடன்காரர்களுக்கெல்லாம் சூன்யம் வைத்து ஏமாற்றிவிடலாம் என்றும் நினைத்திருக்கலாம். இவர்களுக்கெல்லாம் மேலான மந்திரவாதியைக் கொண்டு இவரை அதோகதி செய்துவிடுவதாகவும் ஏற்பாடு செய்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆகையால் இவருடைய மந்திரத்தில் ஒரு மாங்காயும் விழாது ஜாக்கிரதை'' என்றேன்.

உண்மையிலேயே அவள் மிகவும் நல்லவள். அவளுக்கு, அவர் மந்திரம் செய்வதே அடியோடு பிடிக்காது. இந்தப்பாழும் மந்திரம் செய்வதினால்தான் குடும்பம் நசித்துக் குழந்தைகள் ஒன்றொன்றாக இறக்கின்றன என்ற எண்ணமும் அவளுக்கு உண்டு என்பதை நானறிவேன். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் அந்த அம்மாள் அலறிவிட்டார்கள். உடனே புதுச்சேரிக்குப் போவதற்கு அந்தம்மாள் சம்மதித்து அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடன் வாரண்டு என்றால் எப்பேர்ப் பட்டவர்களையும் ஒரு ஆட்டு ஆட்டுமல்லவா?.

அதே சமயத்தில் என் சித்தப்பாவும் அங்கு வந்து விட்டார். இவ்விஷயத்தை சித்தப்பாவிடமும் நேரில் சொல்லி, "இப்பொழுதே நீங்கள் ரயிலேறிவிடுங்கள். நிமிடம் தாமதித்தாலும் ஆபத்துதான். நான் உங்களுக்கு மிகவும் வேண்டியவளாகையினால் உங்களை இந்த சமயத்தில் காப்பாற்ற வந்திருக்கிறேன். கையில் பணமில்லை யென்று தயங்கவேண்டாம். இதோ தருகிறேன்'' என்று கூறி என்கையிலிருந்த பணத்தையும் கொடுத்து அவர்களுக்குப் பெரிய கலக்கத்தையும் உண்டாக்கி சாமான்களை நான் பார்த்துக் கொள்வதாகக் கூறி அக்ஷணமே அவர்களை ஊரைவிட்டனுப்பி விட்டேன்.

தங்களுடைய அபாரமான சொந்த கவலையில் மூழ்கிக் கிடக்கும்பொழுது இம்மந்திரம், தந்திரம் முதலியவைகளில் மனம் செல்லாது என்பதை நம்பினேன். பிறகு என் வீட்டிற்குச் சென்றேன்.

பட்டினத்தில் என்னுடைய நாத்தனர் இருப்பதாகவும் அவரைப் பார்த்துவிட்டு வருவதாகவும் என் பெற்றோர்களிடம் கூறிவிட்டு இரவோடிரவாகப் புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். இங்கு உன்னைப் பார்க்கும் வரையில் என் மனம் தவித்த தவிப்பைச் சொல்ல முடியாது. ஏனென்றால் நீ உன் கடிதத்தில், "ப்ராணநாதா! இக்கடிதங் கண்ட மூன்று தினத்திற்குள் தங்களையாவது, தங்களுடைய கடிதத்தையாவது காணவிட்டால் உடனே நான் தற்கொலை புரிந்து கொள்வது சத்தியம். கடவுளறிய ஒரு பாபமும் செய்யாத நான் காலச்சக்கரத்தின் சோதனை வேளையால் வீண் பழிக்கு ஆளாகி வசை மூட்டைகளைத் தாங்கும் சுமைதாங்கியாய் உயிர்வாழ ஒரு சிறிதும் விரும்பமாட்டேன். அன்று தாங்கள் தெரிவித்தபடி கடவுள் சாக்ஷியாகத் தாங்கள் என்மீது அன்பு செலுத்துவது உண்மையாயின் உடனே வந்து என்னைக் காப்பாற்றுங்கள். இல்லையேல் என் பிணத்தைத் தான் கண்டு கதற நேரும்.'' என்று எழுதியிருந்த வாக்கியங்கள் என் ஹிருதயத்தில் அம்புபோலப் பாய்ந்து என்னைச் சித்திரவதை செய்து விட்டன.

ஜானகி! இனியாவது என்னை நம்புவாயா? அநேகமாக இன்றே பத்மநாபனும் வந்துவிடுவான். கவலைப்படாதே!'' என்று கூறி ஜானகியை அபாரமான அன்போடு தேற்றினாள். இதைக் கேட்ட ஜானகியும் ருக்மிணியும் மெய்ம் மறந்த ஆனந்தத்தில் மூழ்கினார்கள். ருக்மிணி விஜயவல்லியைச் சேர்த்துத் தழுவிக் கொண்டு "விஜயா! எங்கள் குலவிளக்கை ஏற்றவந்த குலதெய்வமாகவே உன்னை நாங்கள் நினைக்கிறோம். ஜானகியின் கஷ்டம் விடியும் காலமும் வருமா என்று ஏங்கித் தவித்த எங்களுக்கு உன்னுடைய உதார குணத்தினால் ஓர் ஆறுதல் கிடைத்தது. எழுந்திரு. முதலில் நீ சாப்பிட வா. பிறகு பேசிக்கொள்ளலாம்.'' என்றாள்.

ஜானகிக்கு கொஞ்சம் தெம்பும், மனத்தில் தைரியமும் உதயமாயிற்று. தன் புருஷனுக்கும் தனக்கும் சந்திப்பு உண்டாகிய விஷயங்களை எல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னதோடு, பத்மநாபன் எழுதியிருந்த கடிதங்களையும் எடுத்துக் காட்டினாள். விஜயவல்லி அக்கடிதங்களைக் கண்டு அபாரமான சந்தோஷத்தை அடைந்தாள்.

பிறகு எல்லோரும் சாப்பிட்டு விட்டு ஆனந்தமாகத் தாம்பூலம் தரித்தவாறே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் துடித்த மனமும், பதறிய முகமும், வேர்வை வழியவும் பத்மநாபன் வேகமாக "ஜானகி, ஜானகி" என்றழைத்துக் கொண்டு உள்ளே வந்தான். அங்கு ஜானகியும், தன் சகோதரியும் அன்யோன்யமாக விருப்பதைக் கண்டு அளப்பரிய ஆச்சரியமும், சந்தோஷமுமடைந்து, "அக்கா! இதென்ன எதிர்பாராத சந்திப்பு! நீ எப்பொழுது வந்தாய்?.........ஜானகி! என்னை மன்னிக்க வேண்டும். சுதந்திரத்தை யிழந்து ஒருத்தனிடம் அடிமையாகப் போய் அகப்பட்டுக் கொண்டு நான் தவித்த தவிப்பு கடவுளுக்குத்தான் வெளிச்சம். உனக்கு ஏதோ பெருத்த ஆபத்து என்றும், உடனே வரவேண்டு மென்றும் விஜயராகவன் என்ற பெயரால் நேற்றிரவு எனக்கு ஓர் தந்தி கிடைத்தது.

அத்தந்தி பெருத்த தீயாகவே என்னை வாட்டிப் பொசுக்கி விட்டது. எஜமானனிடம் அத் தந்தியைக் காண்பித்துச் செலவு பெற்றுக்கொண்டு ஓடிவந்தேன். உனக்கென்ன ஆபத்து நேர்ந்தது? நீ சாதரணமாகவல்லவோ உட்கார்ந்திருக்கிறாய்! விஜயராகவன் என்பது யார்?...அக்கா! நீ எப்பொழுது மலேயாவிலிருந்து வந்தாய்? ஊருக்குச் சென்றாயா? பெற்றோர்களைப் பார்த்தாயா? இங்கு எப்பொழுது வந்தாய்? நம் பெற்றோருக்கு நீ இங்கு வந்தது தெரியுமா!" என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகளை படபடப்புடன் கேட்டான்.

ஜானகி பத்மநாபனைக் கண்டவுடன் தன் கவலையெல்லாம் நீங்கப் பெற்று சந்தோஷ ஸாகரத்தில் மூழ்கியவளாய் எழுந்து மயில் போல் நடந்து சென்று பத்மநாபனை வணங்கி, "நாதா! என்னுடைய ஆபத்தில் என்னைக் காப்பாற்ற விஜயராகவனே தோன்றாத் துணைவராகத் தோன்றினர். அவர் பெயரளவில் ஆண்பிள்ளையேயன்றி ரூபத்தில் ஒரு பெண்தேவதைதான். இதோ! இவர்தான் விஜயராகவன்" என்று விஜயவல்லியைக் காட்டினாள்.

இதைக் கேட்ட பத்மநாபன் "அக்கா! நீயா எனக்குத் தந்தி

யடித்தாய். இது நம் பெற்றோருக்குத் தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டான். இதைக்கேட்ட விஜயவல்லி நகைத்துகொண்டே "மருமான் பிறப்பதற்கு முன்னால் அத்தை ஆவலாக வரவேண்டியது கடமைதானே? அதனால்தான் கடவுள் இத்தனை வருஷங் கழித்து என்னை இங்கு அழைத்து வந்தார். (நடந்த சகல வரலாறுகளையும் கூறி), "நான் இங்கு வந்திருப்பது நம் பெற்றோருக்குத் தெரியாது. இவ்வளவு தூரம் கூட்டிவைத்த கடவுள் அவர்களுக்கும் ஒரு வழியைக் காட்டுவார். இதுகாறும் அசடாக விருந்ததுபோல இனியும் இருக்காதே! கர்ப்பிணியின் மனம் தவிக்குமாயின் அச்சிசுவும் அவ்வாறே நொந்துபோய்விடும். எனக்கு நல்ல அழகிய மருமகனோ, மருமகளோ வேண்டும். ஆகையினால் இனி நீ அவர்களுக்குப் பயந்து இவளைத் தவிக்க விடாதே'' என்று பத்மநாபனுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறினாள்.

18987

இதைக்கேட்ட பத்மநாபனுக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. தன் சகோதரியுடனும், ஜானகியுடனும் ஆனந்தமாக இரண்டு மூன்று தினங்கள் இருந்தான். தான் வேலைக்குப் போய்ச் சேரவேண்டியதையே மறந்து விட்டான். தனக்குக் கிடைத்த விடுமுறை நாட்கள் இன்னும் இரண்டே தினங்களிருப்பதால், அதற்குள் தன் சகோதரியை யழைத்துக் கொண்டு பெற்றோரிடம் சென்று அவர்களுக்கு விஷயத்தை விளக்கிக் கூறி ஜானகியை தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தான். அதைத் தன் சகோதரியிடமும் தெரிவித்தான். அது விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும் சமயம் பயங்கரமாக திடுக்கிடும்படி "இதோ! பாருங்கள். நான் சொல்வது ஒருபோதும் பொய்யாகமாட்டாது. அந்தப் பெண்ணின்மீது படாப்பழி கூற எங்களுக்கென்ன அத்தனை க்ஷாத்திரமா! கெட்டுப்போன அச் சிறுக்கி இப்போது எத்தனை கஜகர்ணங்கள் போட்டும் பலித மில்லாது ஊர்ஜித கர்ப்பமாகிவிட்டாள். இதை நேரில் காட்டத்தான் உங்களை யழைத்துவந்தேன். இனி உங்கள் பெண்ணைக் கொடுக்க ஆக்ஷேபனை இல்லையே!'' என்று சண்பகம்மாளும், சுதர்சனமும் உரத்த குரலில் ஆத்திரம் பொங்கக் கூறிக் கொண்டே வருவதைக் கேட்ட பத்மநாபனின் இதயம் துடித்தது.

விஜயவல்லியின் மனம் பற்றி எரிந்தது. மீண்டும் ஜானகியின் உயிர்நிலை ஊசலாடத் தொடங்கியது. அவள் துவண்டுபோய் விஜயவல்லியின் மீது சாய்ந்தாள். பத்மனாபனுக்கு அதற்குமேல் தாங்க முடியவில்லை. ஆத்திரம் பொங்கிவிட்டது. கண்கள் சிவக்க, உதடு துடிக்க, தேகம் படபடக்க "அப்பா!...அம்மா!நிறுத்துங்கள்..உங்கள் சாகஸம் போதும். உங்கள் கொடிய இதயத்தின் செய்கைக்கு

இன்றோடு சகாப்தம் முடிந்துவிட்டது. ஆம்! ஆம்! ஜானகி கர்ப்பவதி என்பது உண்மையே! இன்னும் சில மாதத்திற்குள்ளேயே உங்களை உங்கள் பேரன் 'தாத்தா! பாட்டி!' என்றும், என்னை அப்பாவென்றும் அழைக்கும் பாக்யம் சமீபித்துவிட்டது. இனி இச் சந்திர சூரியாதிகள் திக்கு மாறி உதித்தாலும் நான் உங்கள் சூழ்ச்சி வலையில் விழுந்து ஜானகியைக் கைவிடமாட்டேன். மரியாதையைக் குலைத்துக்கொள்ளாதீர்கள். ஜானகி! பயப்படாதே! தைரியமாயிரு.'' என்று வெகு துணிபுடன் கூறினான்.

அதே சமயம் விஜயவல்லியும் ஜானகியைத் தழுவியவாறு "ஜானகி! இதென்ன இத்தனை பயம்! தைரியமாயிரு. கிழவர்களின் லீலைகளும் ஒருவிதமாக முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.'' என்று தன் பெற்றோரைப் பார்த்துக் கூறியவாறு, கண்ணைச் சிமிட்டினாள்.

இந்த எதிர்பாராத சம்பவங்களும் வார்த்தைகளும் வந்தவர்களின்மீது இடி விழுந்துவிட்டதுபோலாகிவிட்டன. முக்கண்ணமூர்த்தியின் அவதாரம்போலக் கண்கள் தீப்பொறி பறக்கச் சிவந்துவிட்டன. என்ன சொல்வது என்ன செய்வதென்பதை மறந்து கோபாவேசமாகச் சபித்துவிடுவார்கள்போலாகிவிட்டார்கள். கூட வந்தவர்கள் இதைக் கண்டும் கேட்டும் மிக்க ஆச்சரியமும் இந்த கிழட்டுப் பிணங்களின் உண்மையையறிந்து அதனால் ஆத்திரமும் கொண்டு அவர்களை விரைக்க விரைக்கப் பார்த்துப் பல்லைக் கடித்து "சீச்சீ! இம்மாதிரியான பிழைப்பு பிழைப்பதைவிட ப்ராணனை விடலாமே! பத்மநாபா! பேஷ்! பேஷ்! நீதான் சரியான சுத்த மனத்தையுடைய வீரன்...மெத்த சந்தோஷம்'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தார்கள். இச் செய்கையானது அக் கிழங்களை கதிகலங்கச் செய்துவிட்டது.

21-வது அதிகாரம்

அதிர்ஷ்ட தேவதையின் அதிசய ப்ரவேசம்

நடு நிசி நேரத்தில் சினிமாக் கம்பெனிக்காரரும், அச்சுதனும் சந்திராவை அழைத்து வந்த சமயம் கிணற்றில் நாராயணன் விழுந்ததைக் கண்டு ஓடிய சந்திராவின் செய்கை மேற்குறித்த இருவரையும் கதி கலங்கச்

செய்துவிட்டது. அச்சுதன் வெகு பரபரப்புடன் ஓடி சந்திராவை இறுகப் பிடித்துக்கொண்டு "பெண்மணீ! நில்லு! நில்லு! பதறாதே! கடவுளைப் பிரார்த்தனை செய். உன் தந்தைக்கு யாதொரு ஆபத்தும் நேராது. அதோ வண்டிக்காரன் கிணற்றில் குதித்து உன் பிதாவைக் கரையேற்றுகிறான். இந்த நிசி நேரத்தில் நீ பெருத்த சத்தமிட்டால் அது பேராபத்தாக முடியும். ஏனெனில் எந்த மனிதருக்கும் தங்கள் உயிரைத் தாங்கள் மாய்த்துக்கொள்ளும் உரிமை கிடையாது. நீங்களிருவரும் தற்கொலை புரிந்துகொள்ள எத்தனித்ததை போலீஸார் அறிந்தால் உடனே உங்களிருவரையும் கைதியாக்கி விடுவார்கள். கடவுள் உங்களுக்கு ஏதோ ஒரு மார்க்கத்தில் பிழைக்க வழி காட்டுவார்போலிருக்கும் சமயத்தில் அதைக் குலைத்துக்கொண்டு ஏற்கெனவே உள்ள உங்களுடைய துன்பத்தைவிட அதிக விபத்தைத் தேடிக்கொள்ளாதே!'' என்று தேறுதல் கூறினான்.

இதற்குள் வண்டியோட்டி கிணற்றிலிருந்து நாராயணனை அச்சுதன், சினிமாக்காரர் ஆகியோரின் உதவியினால் கரைமேல் தூக்கிப் போட்டான். நாராயணனுக்கு மூர்ச்சையாகிவிட்டதால் சவம் போலக்கிடந்தான். சந்திரா வழி காட்ட மூவரும் நாராயணனை வீட்டினுள்ளே கொண்டு கிடத்திச் சிகிச்சை செய்தார்கள். இதற்குள் இச் செய்தி சீதாவுக்கும் மற்ற குழந்தைகளுக்கும் தெரிந்துவிட்டது. சந்திராவும் அச்சுதனும் எல்லோரையும் அடக்கி சமாதானம் செய்தார்கள்.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து நாராயணனுக்கு ப்ரக்ஞை வந்து, கண்ணைத் திறந்து பார்த்தான். தான் கிணற்றில் விழுந்திருப்பதாயும், தான் இறந்துவிட்டதாகவுமே தோன்றி அவனைக் குழப்புகின்றது. சந்திரா அவன் முகத்தருகில் வந்து "அப்பா! ஈசன் கருணையினால் நான் பிழைத்துக்கொண்டேன். தங்களுடைய உயிரையும் பிச்சையாக அக் கடவுள் அளித்தார். இனி நீங்கள் பயப்பட வேண்டாம். கண்ணைத் திறந்து பாரும். கவலையைத் தீரும். இதோ! இப் பெரியாரையும், இவ் வீர வாலிபனையும் நமக்குக் கடவுள் சகாயத்திற்காக அனுப்பி இருக்கிறார். இனி நம் வறுமைப்பிணி ஒருவாறு தொலையும் வழியும் ஏற்பட்டுவிட்டது. கவலைப்படாதீர்கள்'' என்று தேன்போல மொழிந்தாள்.

நாராயணன் செவியில் இம் மொழிகள் விழுந்ததும் அவனுடைய அத்தனை பலவீன நிலைமையிலும் அவனை மீறிய ஓர் புதிய சக்தியும், உணர்ச்சியும், முகமலர்ச்சியும், கண்களில் ஒரு நூதன ஜோதியும் உண்டாகி மின்சாரத்தினால் தாக்கப்பட்டவன்போல எழுந்து

உட்கார்ந்து " ஹா! சந்திரா!...சந்திரா! என் செல்வமே! நீ பிழைத்துக்கொண்டு என் வயிற்றில் பாலை வார்த்தாயா! செல்வி? நமது வறுமை தொலையும் காலம் வந்ததா!...இதென்ன கனவா!...நம்மைக் கடவுள் சோதிப்பதுபோல இனி உலகில் ஒருவரையும் சோதிக்க மாட்டார்...இப் பெரியார்...இவ் வாலிபன்....யாரு...ஐயன்மீர்!... தாங்கள் யாரோ தெரியவில்லையே!......என்று தடுமாறியபடியே கூறினன்.

சினிமா முதலாளி :—ஐயா! எக் காலத்திலும் கடவுளின் சோதனை யாரையும் விட்டபாடில்லை. பெரிய பெரிய தவமுனிவர்களையும் வாட்டி வதைக்கும்போது சாதாரணமான மனிதர்களாகிய நாம் எம் மாத்திரம்? கடவுள் ஒருவரை முதலில் எத்தனை சோதனைகள் செய்கிருரோ அதைப்போன்று பின்னல் அவர்களுக்கு ஆதரவும் கொடுப்பார். ஐயா! சோதனையின் கோடுமை என்ற புத்தகத்தைத் தாங்கள் படித்ததில்லையா? அதைவிட சோதனை உலகில் உண்டா! அது கதை என்போம். கதையில் நிகழ்வதுதான் வாழ்க்கையின் அமைப்பு வாழ்க்கையின் நிகழ்ச்சிதான் கதையின் சித்திரிப்பு. கதைகளைப் படித்து மனம் தேறுவதற்காகத்தான் அவைகளைச் சித்தரித்து ஆசிரியர்கள் உலகானுபவத்தை விளக்கிக் காட்டுகிறார்கள். ஆகையினல் நம் வாழ்க்கையின் சம்பவங்கள் விசித்திரமேயல்ல. தாங்கள் மிகவும் ஆயாசமாயிருக்கிறீர்கள். சந்திராவும் அப்படியே இருக்கிருள். ஆகையினல் நீங்களிருவரும் நிம்மதியாகத் தூங்குங்கள். நாங்கள் சென்று காலையில் வருகிறோம். அப்போது விஸ்தாரமாகப் பேசிக்கொள்ளலாம். இனி கவலைப்பட வேண்டாம். நாங்கள் சென்றுவருகிறோம். உம்முடைய விஷயங்கள் பூராவும் நான் இவர் மூலம் அறிந்தேன். கடவுள் இருக்கிறார்; நிம்மதியாக இரும்.

நாராயணன் :—ஐயா! தோன்ருத் துணைவராகக் கடவுள் உங்களை யனுப்பி என்னைக் காக்க முன் வந்திருக்கிறார்போலும். என் சந்திராவைத் தாங்களா காப்பாற்றினீர்கள்?

சந்தி:—அப்பா! ஆம். இவர்களுடைய ஆட்கள்தான் காப்பாற்றினர்கள். இவர்கள் கூறுகிறபடியே தாங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஐயா! உங்களிருவருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். காலையில் பேசிக்கொள்வோம். தாங்கள் சென்று நித்திரை செய்யுங்கள்—என்றுள்.

பிறகு இருவரும் விடை பெற்றுக்கொண்டு சென்றார்கள். சந்திரா நடந்த சகல விஷயங்களையும் தன் பிதாவிடம் கூறினள்.

நாராயணனும் தான் நடு நித்திரையில் திடுக்கிட்டு எழுந்ததாயும் அச்சமயம் குழந்தை அழுததால் அதை எடுத்துக்கொள்ளும் பொருட்டு சந்திராவை எழுப்ப வந்த சமயம் அவளைக் காணாமல் நடுங்கிப்போய் வீடு முற்றும் தேடியதாகவும் மேஜைமீது கடிதமிருப்பதைக் கண்டு அதைப் படித்தவுடன் அவள் கிணற்றில் விழுந்து விட்டதை அறிந்து மனம் சிதறிப்போய்த் தன்னையே மறந்து கிணற்றில் குதித்து அவளை எடுக்கும் பொருட்டு ஓடி வந்து குதித்ததாயும் கூறி “கண்மணே! சந்திரா! நீ இறந்தேபோயிருப்பாய். பாழும் வறுமைப் பேய்க்கே உன்னைப் பலிகொடுத்து விட்டதாக நான் தவித்துப்போய் விட்டேன். எல்லாம் கடவுளின் மாயாவிலாஸ லீலைகள். நம்மாலாவது என்ன? சந்திரா! இவ்வாலிபரா நம் வீட்டை வாங்க வந்தவர்? என்ன அழகு! என்ன குணம் பார்த்தாயா? இப்பெரியார் சினிமாக்காரரா? இவர் எத்தனை பெருந்தன்மையாக விளங்குகிறார். என்ன உயர்ந்த குணம்......என்று வியந்தான்.

பின் இருவரும் அதே விஷயமாகச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து நித்திரை போய்விட்டார்கள். இரவு நடந்தவனைத்தும் ஓர் நாடகமாகவே முடிந்தது.

காலை 8 மணி சுமாருக்கு சினிமா முதலாளியும் அச்சுதனும் இங்கு சொன்னபடி வந்து சேர்ந்தார்கள். நாராயணனும் சந்திராவும் வெகு மரியாதையாயும் அன்பாயும் வரவேற்று உபசரித்து தங்களைக் காப்பாற்றியதற்காகப் பாராட்டிப் பேசினார்கள்.

மானேஜர்:—ஐயா! எல்லாம் ஈசன் செயல். என்னால் ஒன்றுமே இல்லை. நான் உங்களைச் சந்திப்பேனென்றோ, இம்மாதிரி நடக்குமென்றோ நேற்று இரவு வரையில் யாராவது நினைத்தார்களா! நான் மூன்றுமாத காலமாக ஓர் ஜோடி தம்பதிகளை தேடித் தேடி அலைகிறேன். கதையில் கண்டுள்ளபடி தகுந்த வாலிபனும். வீரப் பெண்மணியும் கிடைக்காமல் சோர்ந்துபோய் விட்டேன். நேற்று திடீரென்று கதையில் ஆசிரியர் எப்படி சித்தரித்திருக்கிறாரோ அதே போன்று என் மனத்திற்குத் திருப்தியாக சுத்த வீரராகிய இவரைக் கடவுள் காண்பித்தார். இவரும் நடிக்க இசைந்து விட்டார். இது எங்கள் பாக்யமென்று நம்புகிறோம்.

தற்காலம் சினிமாப் படங்கள் நாளைக்கு நாள் போட்டிமேல் போட்டியாக விருத்தியாகிக்கொண்டு வருகின்றனவே யன்றி படக்கலையின் முக்கியமான வளர்ச்சிக்கும் நடிப்புத் திறமைக்கும் வெற்றி என்பதே ஏற்படாமல் கீழ் நோக்கிப் போய்விடுமோ என்ற பயத்தை விளைவிக்கக் கூடிய நிலைமையில் இருக்கின்றன.

எந்த படத்தைப் பற்றி அட்டகாஸமாயும் ஆடம்பரமாயும் விளம்பரங்கள் ஆயிரக் கணக்கில் செலவிட்டு தடபுடல் செய்கிறார்களோ அப்படங்களில் நூற்றுக்குத் தொன்னூற்றென்பதே முக்காலும்தோல்வியேயடைந்து படக்கலைக்கே அவமதிப்பைக் கொடுத்துவிடுகின்றன. வீண் ஆடம்பரத்திற்குச்செலவழிக்கும்பணத்தைமுக்கிய கலைவளர்ச்சியில் செலவு செய்து படம் தயார் செய்தால் அப்படம் தன்னைத்தானே விளம்பரப்படுத்திக்கொண்டு பொருள் சம்பாதித்துக் கொள்ளும். முக்கால்வாசி படங்கள் தோல்வி யடைவதன் காரணம் சரியானபடி மேல் பார்ப்பவர்கள் அமைவதில்லை. சப்பையான நடிகர்களை குறைவான பணத்தில் பொறுக்கிவிடுவதால் நடிப்பு பெரிய சூனியமாகி விடுகிறது. எந்தெந்த காட்சிகள் கதையில் எப்படி எப்படி கண்டிருக்கிறதோ அப்படி எடுக்காமல் போலி ஸீன்கள் ஜோடித்து ஒன்றுக்கொன்று சற்றும் பொருந்தாது மனம்போன போக்காகக் காட்சிகளை யமைத்துவிடுவதும், கண்ட கண்ட விடங்களில் எல்லாம் அசந்தர்ப்பமாகப் பாட்டுகளைச் சேர்த்துக் கொலை செய்வதுமான இத்தகைய பல ஊழல்களால் படங்கள் வெற்றிபெற முடியாது பாழாகி விடுகின்றன.

படக்கலையில் மேல் நாட்டினரைப்போல வட நாட்டினர் முன்னணிக்கு வருவதேபோல, ஆந்திரர்களும் வெற்றிபெற்று வருகிறார்கள். நம் தமிழ் நாட்டுப் படங்களைப் பொருத்த மட்டில் இது வரையில் வெளியான படங்களில் முழுத்திறமையுடன் பூரண வெற்றி பெற்றுவிட்டதென்று சொல்லக்கூடிய நிலைமையில் ஒன்று கூட இல்லை என்றுதான் கூற வேண்டும். கூடியமட்டில் ஏதோ சில படங்களே சுமாராக விருக்கின்றன.

நடிகர்கள் முதலில், தங்களுடைய கடமைதளுக்கு, மினுக்கு செய்து பணம் பறிப்பதல்ல; நடித்து புகழ்பெறுவதுதான் என்பதை உணரவேண்டும். அப்போதுதான் நடிப்பின் சாரத்தை அவர்கள் அறியக்கூடும். பட முதலாளிகளும் தாம் காட்டப்போவது வெறும் படமல்ல. உன்னதமான கலைகளில் இதுவும் ஓர் முக்கிய கலையாகும், இக்கலையின் விருத்திக்குப் பாடுபட்டு உண்மையான தோற்றம் போலப் படத்தையமைத்துக் காட்டவேண்டுமென்று அவர்கள் எண்ணி வேலை செய்தால் பொது மக்களின் அன்பிற்கும் ஆதரவுக்கும் பாத்திரமாவார்கள்.

ஐயா! நான் இக் கலைவளர்ச்சியின்மீதே நினைவுகொண்டிருப்பதால் என்னை மறந்து அவைகளைப்பற்றி பேசிக்கொண்டுபோய் விட்டேன். நான் நாடி வந்த முக்கியமான விஷயத்தைக் கூற மறந்து

விட்டேன். மன்னிக்கவேண்டும். நான் மேற்குறித்த குறைவுகள் எதுவுமே இல்லாமல் கூடியவரையில் சுத்தமாயும் ஒழுங்காயும் ஒரு அதியற்புதமானதும் ஸ்வாரஸ்யமானதுமான அதிர்ஷ்டப்பிரவேசம் எனும் தப்பறியும் நாவலை சமூகப்படமாகத் தயா செய்ய ஏற்பாடு செய்து வருகிறேன்.

அக்கதையில் கண்டபடி கதாநாயகியின் லக்ஷணங்கள் சற் றேறக்குறைய எல்லா அம்சங்களும் தங்கள் குமாரத்தியின்பால் நிரம்பி இருப்பது காண பரம சந்தோஷமடைகிறேன். வர்ணனைக்கு ஏற்றவாறு அமைப்புடன் பொறுக்குவதுதான் என்னுடைய முக்கிய நோக்கமாகும். எத்தனை ஒழுங்கான முறையில் நடத்தப்பட வேண்டுமோ அத்தனையும் நான் நடத்திக் காட்டுவேன். ஒருவிதமான பயமும் வேண்டாம்.

நடிப்பு கற்றுக் கொடுக்க முக்கியமான உயர்ந்த ஆட்களை வரவழைத்திருக்கிறேன். தாங்களும் கதாநாயகியின் பிதாவாகவே நடிக்க இசைந்துவிட்டால் மெத்த சந்தோஷம். இவ் வீடு விற்காம லேயே மேற் கொண்டு பெரிய மாடி வீடாகக் கட்டிடம் கட்டிவிட லாம். அதற்கு நான் ஜவாப்தாரி. என்ன சொல்கிறீர்கள்?'' என்று வெகு அன்புடன் கேட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்ட நாராயணனின் மனத்தில் அவனையறியாது ஓர் ஆநந்த உணர்ச்சியும் ஆவலும் பளிச்சென்று எழுந்தது. "ஆம்! இது சந்தேகமில்லாமல் கடவுளின் உதவியேயாகும். வறுமையினால் நாம் படும் துன்பம் தீருவதற்கு நல்ல மார்க்கத்தில் உத்தமமான காரியத்தைச் செய்து ஏன் பொருள் தேடக்கூடாது? தேக உழைப்பினால் செய்யும் வேலையில் இதுவும் ஒன்றல்லவா! இதனால் என்ன தீங்கு. என்ன இழிவு. ஒன்றுமில்லை. ஒரு விதத்தி லும் உதவிக்கு முன் வந்து அன்பு காட்டாத மனிதர்களுக்கு ஏன் பயப்படவேண்டும்? கடவுளுக்குப் போதுவாக நடக்கவேண்டுவது தான் முக்கியம், மற்றவைகளைப்பற்றி என்ன?'' என்று சில நிமி டங்கள் தனக்குள்ளாகவே யோசனை செய்தான்.

பிறகு எஜமானரைக் கண்டு பேசத்தொடங்கி "ஐயா! தாங்கள் எனக்கு உதவி புரிய முன்வந்ததற்கு நான் என்னவிதம் கைம்மாறு செய்வேன்? தாங்கள் எத்தனையோ உன்னதமான வகையில் தயா ரிக்கும் படத்தில் என்னைப்போன்றவர்கள் நடித்தால் அது எவ்விதம் வெற்றிபெற முடியும். அதோடு என் சந்திராவை நடிக்கச் செய்வ தென்றால் ஊர் ஜனங்களுக்குப் பயப்படவேண்டி இருக்கின்றதே! சினிமாவில் நடித்த பெண்ணை யாரும் கட்டமாட்டேன் என்று

கட்டுப் போட்டுவிட்டால் என்ன செய்வேன்? அதற்காகத்தான் யோசிக்கின்றேன். ஐயா! உலகம் எப்படி இருக்கிறதென்றால் ஆதரிக்கும் மனம் ஒரு கடுகத்தனையும் இல்லை எனினும் அனாவசியமாக வம்பு பேசவும் தூற்றவும் முன் வருவார்கள். அதற்காகப் பயப்படுகிறேன்.'' என்று மிகவும் நயமாகக் கூறினான்.

எஜமா:—ஐயா! உங்களுக்குச் சம்மதமில்லாத காரியத்தை நான் செய்யச் சொல்லவே மாட்டேன். என்னுடைய அபிப்ராயத்தை முற்றும் கூறிவிட்டேன். இப் பெண்மணியோ சிறுமி. இவள் நடிப்பதனால் யாதொரு குற்றமுமில்லை. இஷ்டப்பட்டவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்துடன் அன்னியர் இல்லாது நடிப்பதற்கு எத்தனையோ பெயர்கள் முன் வந்திருக்கிறார்கள். கண்டவர்களுடனும் கண்ணியமானவர்கள் நடிப்பதென்பது மிகவும் கேவலந்தான். நானே அதற்கு விரோதமாகத் தானிருக்கிறேன். அப்படி நான் நடிக்கச் சொல்லவில்லை. தற்போது கதாநாயகியாக நடிக்கப்போவது சிறு பெண்; ஆகையினால் கடைசியில் கல்யாணத்தின் போது கல்யாண மணவறையில் உட்காருவதுதான் கடைசீ சீன். அதுவரையில் கதாநாயகி தன் பெற்றோருடன், உடன் பிறந்தோருடன், சத்ருக்களுடன்தான் நடிக்கவேண்டும். நன்கு யோசனை செய்து நாளைய தினம் சொல்லுங்கள்.

தாங்கள் நடிப்பதைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. நீங்களும் கோபாலனும் ஒன்றாக கலாசாலையிலும், கவுரமானவர்கள் நடிக்கும் கம்பெனியிலும் பல நாடகங்கள் நடித்திருப்பதை நான் கோபாலன்மூலம் கேள்வியுற்றேன். கோபாலனும் நடிக்க இசைந்துள்ளார். ஆகையினால் நீங்கள் பழய நடிப்பைப் புதுப்பிக்கவேண்டியதுதான். அதில் கவலை என்ன? யோசித்துக் கூறுங்கள்.

அச்சு:—பெரியவரே! என் மீது உங்களுக்கு நம்பிக்கையும் மதிப்பும் இருக்குமாயின் என் வார்த்தையைக் கேளுங்கள். நான் இவ் வீட்டை விலைக்கு வாங்க வேண்டுமென்று முதல் முதல் பார்க்க வந்தபோது தங்கள் புதல்வியும், அவர்களின் தோழியும் உங்கள் வறுமையின் தொல்லையையும் வரதக்ஷிணையின் அலங்கோலத்தையும் பற்றி வெகு விசனத்துடன் பேசிக்கொண்டிருந்ததை நான் கவனித்ததும் என் மனமே குழம்பி மாறிவிட்டது.

என் பெற்றோர்களும் வரதக்ஷிணைப் பேய் பிடித்தவர்கள். அப்பேயின் பேராசை என்னையும் சிறிது பிடித்திருந்தது. உங்கள் புதல்வியின் வார்த்தைகளைக் கேட்டதும் நான் எண்ணி இருந்ததும் என் பெற்றோர் விரும்புவதும் சுத்த பிசகு என்று தெரிந்து கொண்டேன். அந்த நிமிடமே என் மனம் அடியோடு மாறுபட்டு விட்டது.

(பிறகு நடந்த விவரங்களைக் கூறி) இவ்விதம் முடிவடைந்திருக்கிறது. நீங்கள் ப்ரியப்பட்டால்—என்னை உங்களுக்குப் பிடித்தால்—கதையின்படிக்கு கதையிலும் நானே உமது மருமகனாகி, உண்மையிலும் உமக்கு மருமகனாகிவிடத் தயாராகவிருக்கிறேன். தங்கள் பெண்ணை மணக்க நான் மிகவும் விரும்புகிறேன். மனப் பொருத்தம் ப்ரதானமேயன்றி வேறு ஒன்றும் அவசியமில்லை. உங்கள் மகள் விரும்புவாளாயின் நாங்கள் இருவரும் என்றும் பிரியாத இன்பத்துடன் வாழ்க்கை நடத்தலாம். எனக்குக் கொடுக்க விருப்பமாயின் நாலும் அவளும் சேர்ந்து நடிப்பதில் நான் பரம த்ருப்தியடைகிறேன். நானாக வலுவில் இம்மாதிரி ஏன் சொல்கிறேன் என்றால் தங்களுடைய துயரத்தைத் தீர்த்து என்னாலாகிய உதவியைப் புரிவதற்குத்தான் முன் வந்தேன். வரதக்ஷிணைப் பேய்களின் கண் முன்பு நான் சுயேச்சை மணம் செய்துக்கொண்டு அவர்களைத் திருப்ப முயற்சிக்கவே நான் விரும்புகிறேன்.—

என்று அச்சுதன் கூறுவதைக் கேட்ட சந்திராவின் உள்ளம் பூர்ண சந்திரக் கலைபோல் ப்ரகாசித்தது. தனக்கு இத்தகைய ஓர் உதவி கிடைக்குமென்றும், கடவுள் துணை புரிவார் என்றும் கனவிலும் கருதவில்லை யாதலால் சந்திராவுக்கு தான் என்றும் கண்டறியாத புதிய ஆநந்த உணர்ச்சி பொங்கி எழுந்தது. அந்த அபாரமான சக்தியுடன் அச்சுதனை ஓர் அற்புத பார்வையினால் பார்த்து தனக்குச் சம்மதம் என்று தெரிவிப்பதுபோலத் தோன்றினாள்.

நாராயணனுக்கும் அச்சுதனின் அம்ருத மொழிகளானவை பட்ட மரத்தைத் துளிர்க்கச் செய்ததுபோன்ற பரம த்ருப்தியும் சந்தோஷமும் கொடுத்தன. அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கடவுளின் கருணையை மெச்சிப் புகழ்ந்து இருதய பூர்வகாகப் பணிந்தான். அச்சுதனின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "ஆஹா! வீர வாலிபனே! தீர புருஷனே! ஏழையாகிய என்னுள்ளம் இப்போது எத்தனை களிப்பெய்து பூரிக்கின்றது என்பதை என்னால் அளவிட்டுக் கூறவே திறமன்று. என்னைப்போன்று இதை யனுபவிப்பவர்களுக்குத்தான் அதன் உணர்ச்சி தெரியும். என்னப்பனே! முன் பின் உங்களை நானறியாவிட்டாலும் உங்களைப் பார்க்கும்போதே என் மனம் என்னை மீறி உங்களிடம் அன்பு பூண்டது. உங்களை நான் மருமகனாக அடையும் பாக்யம் பெற்றதற்கு நானும் ஏதோ ஒரு சிறிது புண்ணியம் செய்திருப்பதாகத்தான் எண்ணுகிறேன். சந்திரா! விஷயமறிந்தாயல்லவா! என்ன சொல்கிறாய்?' என்று கேட்டான்.

இதைக் கேட்ட சந்திரா அடங்காத ஆநந்தத்துடன் "அப்பா! எல்லாம் கடவுளின் செயல். கஷ்டத்தைக் கொடுத்து சோதித்த

ஈசன் உடனே சுகத்தைக் கொடுத்து ஆதரிக்காமலிருக்கமாட்டா னல்லவா! மலையத்தனை பாவத்தில் அணுவத்தனை புண்யத்தைச் செய் திருக்கிறேன். தாங்கள் இனி எதற்கும் யோசிக்கவேண்டாம். தயங்கவேண்டாம். அவரவர்களின் பிழைப்பிற்கு உத்தமமான நல்ல முறையில் பரிசுத்த இருதயத்துடன் எத்துறையில் தொழில் செய்து பொருள் தேடினும் அது கடவுளுக்கு ஏற்றதே யாகும். இதில் பாவமோ, குற்றமோ, குறைவோ, இழிவோ ஒன்றுமில்லை. இதுதான் நாம் முக்யமாகக் கவனிக்கவேண்டிய கடமையாகும். நம் முடைய வறுமையை நீக்கக் கடவுள் அளித்திருக்கும் நல்ல மார்க் கத்தை நாம் ஏன் விலக்கிக்கொள்ளவேண்டும்'' என்று அழுத்தந் திருத்தமாக ஆணியறைந்ததுபோலக் கூறினாள்.

அம் மொழிகளைக் கேட்ட சினிமா முதலாளியின் சந்தோஷம் கரை கடந்தது. அச்சுதனின் உள்ளம் விகசிதமடைந்து பூரித்தது. தன் உள்ளார்ந்த அன்பைத் தன்னிரு விழிகளாலேயே தெரிவித் தான். நாராயணன் அச்சுதனை நோக்கி "வீர வாலிபா! உன் பெற் றோருடன் கலக்காமல் நீ இசைந்துவிட்டால் அவர்களுக்குக் கோபம் வராதா! அவர்களுடைய வெறுப்புக்கு இலக்காக நேர்ந்தால் என்ன செய்வது?'' என்றான்.

அச்சு:—ஐயா! அந்த கவலை என்னைப் பொருத்தது. தங்களுக்கு வேண்டாம். கடவுள் கிருபை பரிபூர்ணமாக இருக்கவேண்டும். நானும் உங்கள் மகளும் தேனும் பாலும்போல வாழ்வோம். நான் சிறு குழந்தையல்ல. மேஜராகியவன்; என்னிஷ்டப்படி நான் நடக்க சட்டமும் இடங்கொடுக்கும். நான் இதுபரியந்தம் இவ்வரதக்ஷிணை யின் கொடுமையை அறியாது மிருகமாயிருந்து விட்டேன். தங்கள் குமாரத்தியின் வாயிலாகவே அதை யறிந்தேன். ஆதலால் அவர் களுக்கே உதவி புரிய மனத்தில் உறுதி வைத்தேன். படித்த படிப்பு இந்த விஷயத்திலாவது பயன் படட்டும் என்று எண்ணித் துணிந்து விட்டேன். அவ்விஷயமாகத் தாங்கள் ஒரு சிறிதும் கவலைப்பட வேண்டாம். நான் உறுதி கொடுக்கிறேன்.'' என்று வெகு அன் புடன் கூறினான்.

சினிமா எஜமானர் மிக்க சந்தோஷத்துடன் நாராயணனை நோக்கி "ஐயா! கை நிறைந்த பணத்தைவிடக் கண் நிறைந்த கண வனே மேல் என்று பெண்கள் சொல்வார்கள். அதேபோல கண் நிறைந்த கணவனும், கை நிறைந்த பொருளும் ஒன்றாக ஒரே சமயத் தில் கடவுள் கொடுத்து உதவிபுரிந்து விட்டார் பார்த்தீர்களா? 'அவரை நம்பிய எவரையும் கைவிடமாட்டார்'' என்கிற உண்மை ப்ரத்யக்ஷமாகிவிட்டது.'' என்றார்.

நாரா :—ஐயனே! எல்லாம் அவனருள். நாம் முதலில் விவாகத்தை வெகு சுலபமாயும் ரகஸ்யமாயும் ஒரு கோயிலில் நடத்தி விட்டால் பிறகு நம் காரியத்தைத் தொடங்கலாமென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......

அச்சு :—உங்களிஷ்ட மெப்படி?

எஜமா :—ஆகா! அப்படியே செய்யலாம். சுலபமாக ஓர் கல்யாணத்தை முதலில் நடத்தி விட்டு நம் காரியத்தைத் தொடங்குவதும் வெகு மங்களகரமானதேயாகும். இக்கல்யாணச் செலவு என்னைப் பொருத்தியதாகட்டும். இதோ! உங்களுக்கு அட்வான்ஸாக இந்த 1000 ரூபாயை வைத்துக்கொள்ளுங்கள். மற்றதை பிறகு அக்ரிமெண்டுபடிச் செய்யலாம். அச்சுதா! என்ன சொல்லுகிறாய்? இதோ இந்த 1000 ரூபாய் உனக்கு அட்வான்ஸாக பெற்றுக்கொள்ளு'' என்று கூறியவாறு இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து இருவரிடமும் கொடுத்தான்.

ஒரே சமயத்தில் 1000 ரூபாயைச் சேர்ந்தார்ப்போல பார்த்திராத நாராயணனுக்குண்டாகிய ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. லக்ஷ்மீ கடாக்ஷம் ஆரம்பமாகும் நேரம் வந்துவிட்டதென்று அகமகிழ்ந்தவாறு இரு கைகளையும் நீட்டி வணக்கத்துடன் ரூபாயை வாங்கிக் கொண்டான். கடவுளுடைய பாதாரவிந்தங்களில் அந்த நோட்டை வைத்து கடவுளை வணங்கினான். பாதத்தையும் பணத்தையும் கண்ணில் ஒற்றிக்கொண்டான். சந்திராவும் அவ்வாறே செய்தாள்.

கூடத்து அறையிலிருந்தபடியே இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த சீதாவின் மனம் கட்டு மீறிக் களித்தது. அக்குதூகலத்தில் அவன் குதிக்கவாரம்பித்து விட்டாள். அச்சுதனும் பணத்தை வாக்கிக்கொண்டு தன் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்தினான். அன்றே சந்திராவையும் நாராயணனையும் கம்பெனிக்கு (ஸ்டுடியோவிற்கு) அழைத்துக்கொண்டு சென்று சினிமாவில் நடிக்க ஒப்புக்கொண்டு வந்திருப்பவர்களை அறிமுகம் செய்துவைத்தார். அந்த இடத்தையும், சினிமா எடுக்கும் கருவிகளையும், சீன் ஜோடிப்புகளையும் காட்டினர்.

நாராயணனும் சந்திராவும் எல்லாவற்றையும் பார்த்து சந்தோஷமும் வியப்பு மடைந்தார்கள். அதன் பிறகு மறுதினமே கம்பெனியில் அக்ரிமெண்டு முடிந்து விட்டது. நாராயணனுக்கும் சந்திராவுக்கும் சேர்ந்து 10000 ஆயிரம் ரூபாயும் அச்சுதனுக்கு 7 ஆயிரம் ரூபாயும் தீர்மானிக்கப் பட்டது. இச்சம்பவங்கள் நடந்த ஒரு

வாரத்திற்குள்ளாகவே அதிக ஆடம்பரமின்றி கிருஷ்ணன் கோயிலில் சந்திராவுக்கும் அச்சுதனுக்கும் வெகு ஆநந்தகரமாயும் மங்களகரமாயும் விவாகம் நடந்தேறி விட்டது.

விவாகத்திற்கு நாராயணன் முக்யமானவர்களுக்குத் தவிர வேறு யாருக்கும் அழைப்பு அனுப்பவே இல்லை. பங்கஜம் தன் தாயார் இறந்தபோது சென்ற பிறகு, விவாகத்திற்குக் கூட வர பயந்து ஏதோ சாக்கு கூறிவிட்டாள்.

அச்சமயந்தான் ருக்மிணியின் வீட்டில் ஜானகியின் கர்ப்பம் தெரிந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததால் அவர்களும் விவாகத்திற்கு வரவில்லை. அச்சுதனும் சந்திராவும் உண்மைக் காதலர்களாய் கடவுளாலேயே பிணைக்கப்பட்டு விட்டதால் அவர்கள் தேனும் பாலும் போல வெகு அன்பாகவும் மலர்ச்சி பூத்த முகத்தினராயும் விளங்கி மறுதினம் முதல்கொண்டே நாடகத்தை நடித்துப் பழக்கிக் கொள்ள வாரம்பித்துவிட்டார்கள்.

அச்சுதனின் பெற்றோர்கள் அன்று அச்சுதன் சண்டை போட்டுக்கொண்டு வெளியில் சென்ற பிறகு'' தடியன் எங்கே போய் விடுவான். நாளையே திரும்பி நாய் போல வருவான். இந்த அல்பப் பயலைத் தேடுவது எதற்கு?'' என்று இருமாப்பும் அகந்தையுங் கொண்டு பேசாதிருந்துவிட்டார்கள். ஆனால் அவன் தாயாருக்கு மட்டும் மகன் சென்றுவிட்டதானது பகீரென்றது. பெண்பிள்ளை எங்கு தேடுவாள், என்ன செய்வாள் பாவம்! தன் கணவனுடன் சொல்வதெல்லாம் வீணாயிற்று.

நாட்களோ ஒன்றிரண்டென நான்கு ஐந்து நாட்கள் சென்று விட்டன. அச்சுதனுக்கு மறு தினமே சினிமாவின் சம்மந்தம் ஏற்பட்டுவிட்டதால் அவன் உடனே ஒரு யோசனை செய்தான். அதாவது தன் பெற்றோர்கள் தன்னைத் தேடிக்கொண்டு வந்து தொந்தரவு செய்தால் தான் இப்போது தலையிட்டுக் கொண்டிருக்கும் காரியத்திற்கு விக்கினம் உண்டாகும் என்று எண்ணி அச்சுதனின் சினேகிதன் கடிதம் எழுதுவது போல ஒரு டைப்பு அடித்த கடிதத்தை அவர்களுக்கு அனுப்பிவிட்டான். கடிதத்தின் விஷயமாவது:—

''உங்களுடைய பேராசையினால் அநியாயமாக ஓர் பிள்ளையை இழக்க மனந் துணிந்துவிட்டீர்கள். நேற்றைய தினம் புறப்பட்ட ரங்கோன் கப்பலில் அவன் ப்ரயாணமாகியதை நான் கண்ணால் கண்டு கண்ணீர் விட்டேன். நான் எத்தனை தடுத்தும் கேட்கவில்லை. அவனுக்குள்ள மனக்கொதிப்பில்

குறைந்தது இரண்டு மாத காலமாவது வெளிநாட்டில் சுற்றி விட்டுத் திரும்புவான் என்று எண்ணுகிறேன். இனி நீங்கள் அழுது ப்ரயோஜனமில்லை. பெண் வீட்டாரைக் கொள்ளை யடிக்கும் பேராசையை இனியாவது விட்டு ஒழியுங்கள்.

இங்ஙனம்
அச்சுதனின் அன்பன்.''

இதை அவர்கள் படித்த உடனே மின்சாரம் தாக்கியது போல மனத்தில் அதிர்ச்சியும் கவலையும் உண்டாகி தாயாரைத்தான் அதிக மாகப் பாதித்தது. "ஐயோ! இனி என்ன செய்வது. ஒரு குழந்தையின் அருமை தெரியாமல் இப்படிப் பாழாகிவிட்டோமே! ஐயோ! என்ன செய்வேன்?'' என்று கண்ணீர்விட வாரம்பித்தாள். வெளி நாட்டிற் குச் சென்றுவிட்டவனை எப்படித் தேடுவது, பிறர் கேட்டால் எப்படி பதிலுரைப்பது. என்று தவிக்கிறாள். தினே தினே கவலை யதிகரித்து விட்டதால் உடல் மெலிய வாரம்பித்து விட்டது.'' சுவர் இருந்தா லல்லவோ சித்திரம் எழுதலாம். பணப் பேராசையில் மூழ்கியதன் பலன் மகனையே இழக்க நேர்ந்துவிட்டதே! இனி நமக்கு சந்தோஷ மேது. மதிப்புதான் ஏது. பொது மக்கள் என்ன சொல்லமாட் டார்கள். ஹா!...கடவுளே! மதி கெட்ட பின் அதிகம் வருந்தி யாது பயன்?'' என்று சோகத்தில் மூழ்கிஎன்ன செய்வதென்று தெரியாமல் கிராமத்திற்குப் போய்விட்டார்கள்.

22-வது அதிகாரம்

வித்தைக்குள் வித்தை—விசித்திர சம்பவம்

கதி கலங்கிக் குழம்பிப்போய்விட்ட அம்பு ஜம் ஒரு விநாடி நேரம் தத்தளித்தாள் உடனே தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளும் வகையைத் தேடாவிட்டால் இவர்களால் தனக்குக் கட்டாயம் தீங்கு நேரும் என்று தெரிந்துகொண்டாள். தன் மடியில் எப்போதுமிருக்கும் கைத் துப்பாக்கியை எடுக்க முயன்றபோது தன்னைக் கயிற்றுக் கட்டி லுடன் கட்டியிருப்பதை யறிந்து முன்னிலுமதிகரித்த கவலையும் திகிலும் அடைந்தாள்.

மெல்ல ஆடி அசைந்து தலையை நிமிர்த்தி மாருக்கு நேர் உள்ள கயிற்றைப் பல்லால் பலங்கொண்ட மட்டும் கடித்துக் கடித்துத் துண்டாக்கிவிட்டாள். உடனே மிச்ச கட்டுகளை வெகு விரைவில் கையினுலேயே விலக்கி தன்னை விடுவித்துக்கொண்டாள். அந்த முரட்டு ஆட்களோ தாங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு விடிவதற்குள் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் ஓட்டமாக ஓடுவதால் ஓட்டத்தில் உண்டாகும் ஆட்டத்தில் இவளுடைய அசைவை தனிமையில் அறிய முடியாது போய்விட்டது.

கட்டிலில் மேல் பாகத்தில் தலையை மட்டும் நீட்டி அவர்கள் ஒரு சிறிதும் எதிர்பாராத விதமாக ஒரு வினாடிப் பொழுதில் தன் மடியில் சொருகி இருந்த கைத் துப்பாக்கியினுல் அம் முரடர்களின் கால்களை குறி பார்த்து டப் டப் என்று வெகு தைரியமாயும் வீரமாயும் சுட்டாள்.

அடுத்த க்ஷணமே ஒவ்வொருவராக நால்வரும் கட்டிலைப் போட்டுக்கொண்டு ஹாவென அலறியவாறு விழுந்தார்கள். வீராங்கனையாகிய அம்புஜம் கல கலவென்று நகைத்துக் கொண்டே ஒரேயடியாகக் கீழே குதித்து "வீரர்களே! உங்கள் செய்கைக்கு மெச்சினேன். உங்களைப்போன்ற வீரர்கள் உலகத்தில் மலிந்துவிட்டால் உலகத்திற்கே பெரும் கீர்த்தியும் க்ஷேமமும் உண்டாகிவிடும்.

அட மூடர்களே! என்னைக் கயிற்றுல் கட்டியவர்கள் என்னிடமுள்ள இயற்கையான ஆயுதத்தினுல் நான் தப்பித்துக் கொள்வேன் என்று நீங்கள் நினைக்கவில்லைபோலும். சங்கிலியாலாவது கட்டி இருக்கலாகாதா! ஊம்......அது கிடக்கட்டும். நீங்கள் யார்? யாருடைய போதனையினுல் வந்தீர்கள்! உங்களுக்குத் தலைவன்யாா? இந்த உண்மைகளைக் கூறுவிட்டால் இத்துப்பாக்கியிலிருக்கும் மிச்சமுள்ள தோட்டாக்கள் உங்கள் மார்பைத் தாவிச் செல்லும். ஊம்: சொல்லுங்கள்'' என்று அதட்டியவாறு கேட்டாள்.

தாங்கள் எத்தனையோ முரட்டு வீரர்களாக இருந்தும் இந்த அல்பப் பெண்பிள்ளையின் கையினுல் சுட்டு வீழ்த்தப் பட்டுக் கிடப்பதை எண்ண மனது வெடித்து விடும்போலாகிவிட்டது. கண்கள் சிவந்து திடிக்கின்றன. காலில் சுட்டு விட்டதால் ரத்தம் ஓடுகிறது. எழுந்திருக்க முடியாத வேதனை செய்து வதைக்கிறது. ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டு விழிக்கிறுர்கள். பதிலே பேசவில்லை.

அம்புஜம் அதிகார தோரணையுடன் தன் டார்சு விளக்கை

எடுத்து அவர்களின் முகத்திற்கு நேரே காட்டினாள். பொழுதும் பல பலவென்று உதயமாகிக்கொண்டே வருகிறது.'' உண்மை வரப் போகிறதா! இல்லையா! மீளாத தண்டனையை ஆயுள் பரியந்தம் அனுபவிக்கத் தயாராகவிருக்கின்றீர்களா! ஊம். ஜாக்ரதை'' என்று கூறிக்கொண்டே துப்பாக்கியை உயர்த்தினாள்.

உயிரும் போய்விடுவதென்றால் அவர்கள் அதற்குத் துணிவார்களா! யாராயினும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத்தான் விரும்புவார்கள். அம் முரடர்களில் ஒருவன் அம்புஜத்தை நோக்கி''...ஏ!.. ...என்னமோ அதிகம் பேசறியே! என்னமோ இந்த பாயும் வவுத்துப் பொயப்புக்குத்தான் நல்ல வேலை செய்யறது; கெட்ட வேலை செய்யறது அல்லாம். எங்க தலைவிதி போட வயி போறதுண்ணு தான் வந்துட்டம். இனிமே இன்னா செய்யறது. அல்லாத்துக்கும் எங்க எஜமானண்ணு பேரு வச்சிங்கீரானே அந்த பாடெலெவெப் பான் சூச்சிதான் போபேன். ஒன்னெ தூக்கியாந்து சேத்துட்டா ஆயிரம் ரூபா தர்ரேன்னு சொன்னான். இந்த பிச்சைக்கார நாயுங்க ஒப்புகினு வந்துட்டோம்.

யாரோ துப்பு தொலக்க வரானும் ஒரு கெயவன். அவனெ நேத்திக்கிக் கொண்ணுந்து கையை கட்டிப்பிட்டு ஒரு செவிருலே வச்சு அப் பாவிங்க உசிரோடெ கட்டடம் கட்டிப்புட்டாங்க.'' என்று அவர்கள் கூறுவதைக் கேட்டதும் அம்புஜம் தீயை மிதித்தவள் போல "ஹா!...அவரைக் கட்டடம் கட்டிவிட்டார்களா! நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா!'' என்று பதைக்கக் கேட்டாள்.

அதைக் கேட்ட முரடன் "ஐயோ!....ஏம்மா இப்பிடி தவிக்கிறே! அந்த கெயவன் செத்துட்டான்னு பாத்தியா! அவன் பக்காப் பேர்வழியாக்கீரானே! கட்டடத்துக் குள்ளற வச்சி கட்டச்செல சும்மாதா இருந்தாரு. இவங்க நல்லா கட்டிப்புட்டு கொம்மாளமடிச்சிக்கினு கூத்தாடிபுட்டுப் பூட்டாங்க. இதுக்குள்ளற ஒன்னெ கொண்டாரச் சொன்னாங்க; நாங்க ஓடியாந்தோம். தாயே! ஒங்களெ வனதேவதையா நெனச்சிக்கிறோம். எங்களெ உட்டுடுங்க. நாங்கள் சத்தியமா இனிமே ஒண்ணும் செய்யமாட்டோம். எங்களெ நம்புங்க. எங்களுக்கு உயிர் பிச்சை கொடுங்க.'' என்று கெஞ்சினார்கள்.

அம்புஜமா இதற்கு இசைபவள்! தன் பிதா எப்படியும் தப்பித்துக்கொள்வார் என்று நம்பிக்கையுடன் அவர்களை நோக்கி "உன் எஜமானன் பெயர் என்ன? சமீபத்தில் சில மாதகாலமாக ரயில் வண்டிகளில் களவு போய்க்கொண்டிருக்கிறதே அது உன் எஜமானன் நடத்துவதுதானே: சென்ற மாதம் காசி யாத்திரைக்குச்

சென்றவர்களை வண்டியிலேயே மகமதிய மாதுபோல முகமூடியுடன் வந்து கொள்ளையடித்தது நீங்களா! உன் எஜமானனே தானு! உண்மையை உரைத்தால் உங்களைத் தப்பித்துக்கொள்ளச் செய்கிறேன்.'' என்ருள்.

முரடன் :—அம்மா! உங்கள் கால்லெ கும்பிட்றேன். நாங்க ஒரு பாவமும் அறியமாட்டோம். எஜமானந்தான் அல்லா வேசமும் போடுவான். தினம் ஒரு வேசங் கட்டிகிணு எங்கேங்கேயோ போவான். அவன்தான் அல்லாம் சேவான். ஆனக்கா! இந்த காசீ யாத்ரெ திருட்டுலே ஒரு ரகசியம் இருக்குது. இனிமே எப்படியும் ஆப்பிட்டுகிறோம். அதையுந்தா சொல்லிப்புட்றேன்.'' என்ருன்.

அதே சமயம் "உனக்கு அந்த ச்ரமம் வேண்டாம் நானே கண்டுபிடித்துவிட்டேன்.'' என்று கூறிக்கொண்டே நாயுடுவும் அவர் ஆட்களில் சிலரும் அங்கு வந்தார்கள். இவர்களைக் கண்டதும் அம்முரடர்கள் "ஆ! ஆ! இவரைத்தான் செவிருடன் கட்டடம் கட்டினுங்க. எப்படியோ வந்துட்டாரே! இவரு என்ன மாயா ஜாலங் கிலம் கத்திக்கிட்டிருக்காரா!'' என்று வியந்தார்கள். அம்புஜம் அவரை வணங்கி "ஆகா! அப்பா! இந்த கேஸை மிகவும் அல்பமாக எண்ணினேம். இதில்தான் நாம் கண்டிராத பெரிய ஆபத்துகள் விளைந்துவிட்டதாமே! ஐயோ! அதைக் கேட்கும்போது திடுக்கிட்டேன். தாங்கள் எப்படியும் தப்பித்துக்கொள்வீர்கள் என்று நம்பிக்கை இருப்பினும் பயம் மட்டும் நடுக்கிவிட்டது. ஏதோ கண்டுபிடித்துவிட்டதாகச் சொன்னீர்களே! அதென்ன. நம் வேலை முடிந்துவிட்டதா! இன்னும் பாக்கி உள்ளதா! தாங்கள் எவ்விதம் அகப்பட்டுக்கொண்டீர்கள்?'' என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

இது கேட்ட நாயுடு நகைத்துக் கொண்டே,! "செல்வீ! இவ்விஷயமெல்லாம் நமக்கு சர்வ சகஜமல்லவா! என்னையவர்களறியாதபடி நான் பலவித மாறுவேடத்துடன் இது விஷயமாகக் கண்டுபிடித்து வந்தேன். யாத்திரைக்குக் கிளம்பிய அத்தனை பெயர்களையும் ஒருங்கே திரட்டி யழைத்துச் சென்ற மனிதன்மீதே எனது சந்தேகம் சென்றது. ஆகையினுல் நான் அவனை அவன் அறியாதவாறு கவனித்து வந்தேன்.

அம்புஜம் இடை மறுத்து "என்ன! என்ன! அந்த மனிதன் மீது சந்தேகங்கொள்ள என்ன நியாயமிருக்கிறது. அவன் அவர்களின் சொந்த மனிதனல்லவா'' வென்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

நாயுடு:—நான் கூட அப்படித்தான் முதலில் நினைத்தேன். பிறகு அவன் கொடுக்கவேண்டிய கடன் பாக்கி வெகு நாட்களாக இழுக்கடித்துக் கொடுக்காததால் கடன்காரர்கள் வாரண்டு பிறப்பிக்கப்போவதாய் பயமுறுத்தினர்களாம். பிறகு பணம் முழுதையும் வட்டியுடன் கொடுத்துவிட்டதை யறிந்தேன். திடீரென்று பணம் எப்படி வந்தது! ஒருவிதமான வரும்படியும் இல்லாத இவன் திடீரென்று இத்தனை பெரிய தொகையை எவ்விதம் கொடுத்தான் என்று எனக்குப் பலமான சந்தேகம் பிறந்தது.

அது பற்றியே நான் விசாரித்து உளவு அறிந்ததில் இவன் சில நகைகளை விற்றதாயும், சிலவற்றை அடகு வைத்ததாயும் தெரிய வந்தது. அந்நகைகளை யாரிடம் விற்றுனே அவர்களிடம் சென்று இது திருட்டு நகை என்றும், இதை வாங்கியதற்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதென்றும் பயமுறுத்திக் கேட்டதில் அவர்கள் பயந்துகொண்டு நகைகளைக் கொடுத்து தங்களைக் காக்கும்படி வேண்டினர்கள்.

நான் அந்த நகைகளை யாத்திரீகர்களின் வீட்டில் கொண்டு காட்டியதில் 'இது என்னுடையது. இது என்னுடையது.' என்று கூறினர்கள். அதையே பெரிய ஆதாரமாகக்கொண்டு மிகவும் ரகஸிய மாக அந்த மனிதனைக் கைதியாக்கி அவனைக்கொண்டு விசாரித்ததில் வெகு நாட்களாக இம்மாதிரி ரயில் வண்டியிலேயே கொள்ளை யடிக்கும் கூட்டத்தின் சம்மந்தம் தனக்குக் கிடைத்ததாயும் அவர்களின் ஒத்தாசையைக்கொண்டு தன்னுடைய கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுத் தான் இப்பெரிய கொடுங்காரியத்தைச் செய்ததாயும் இப் பெண்பிள்ளைகளை எல்லாம் இந்த நோக்கத்துடனேயே ஒன்றுகச் சேர்த்து யாத்திரை அழைத்துச் சென்றதாயும் அக் கூட்டத்தினருக்குப் பாதி கொடுத்து விட்டதாயும் அவர்களைத்தான் காட்டிக் கொடுப்பதாயும் கூறிவிட்டான்.

உடனே அவனையழைத்துக்கொண்டு நாங்கள் புறப்பட்டோம். இதற்குள் அவர்களைச் சேர்ந்த ஆள் இந்த விஷயத்தை யறிந்து அவர்களுக்கு ரகஸியமாக அறிவித்து விட்டான். அவர்கள் எப்படியோ நாங்களறியாதபடி முன் ஜாக்ரதையாக வந்து எங்களை வண்டியுடன் மடக்கிக் கட்டி அவர்களிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று என் மூக்கில் மயக்க மருந்தை முகரச் செய்தார்கள்.

நான் அதை முகராமலேயே முகர்ந்த பாவனையாக மயக்கம் போட்டவன்போல் கண்ணை மூடிவிட்டேன். அவர்கள் கையில் நான் அகப்பட்டுக்கொண்டதாயும் என்னை அடியோடு தொலைத்துவிட்

டால் இனி பயமில்லை என்றும், எப்படிக் கொல்வது. சுட்டுக்கொல்வதா; வெட்டிவிடுவதா; இம்மாதிரி செய்தால் இந்த சரீரத்தை அப்புறப்படுத்த வேண்டிவரும். அதை யாராவது கண்டுபிடித்து விட்டால் ஆபத்தாகிவிடும். ஆகையினால் சுவருடன் சுவராக வைத்துக் கட்டிவிட்டால் எந்த சமயத்திலும் யாரும் கண்டுபிடிக்கவே முடியாது. அவன் சுவருடனேயே மக்கி மண்ணாய்ப்போய் விடுவான். இதுதான் முடிவான தீர்மானம் என்று பேசி முடிவு கட்டிவிட்டார்கள். உடனே கொல்லத்து வேலைதெரிந்த தங்களுடைய ஆட்களையே கொண்டு தங்கள் வேலையை ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் கையில் நான் அகப்பட்டிருப்பதால் மொத்தபேர்களும் என்னையே சூழ்ந்துகொண்டு மற்றவற்றை கவனிக்காமலேயே விட்டுவிட்டதால் நம்முடைய ஆள் உடனே வெளியில் சென்று என்னுடைய கட்டளையின் படிக்கு முன் ஜாக்ரதையுடன் போலீஸை யழைத்துக்கொண்டுவர ஓடினான்.

இதற்குள் அந்த முண்டங்கள் என்னைத் தூக்கமாட்டாது தூக்கி நிற்கச் செய்து கையைக் கட்டி கட்டிடம் கட்டும் இடத்திற்குச் சரியாக நிறுத்தி "ஏ நாயுடு! இனி தொலைந்தாய்! இந்திரன் சந்திரன் வந்தாலும் திரும்பமாட்டாய். உம். சீக்கிரம் கல்லையடுக்குங்கள்.'' என்று உத்திரவிட்டார்கள்; அவர்களும் கல்லையடுக்கிக் கட்டிவிட்டார்கள்.

அம்புஜம் இடைமறுத்து "ஹா! கட்டிடம் கட்டி முடியும் வரையில் நீங்கள் ஏன் பேசாமலிருந்தீர்கள்? அப்போதே திமிரிக் கொண்டு உதைத்தெறியக்கூடாதா! மூச்சுத் திணறவில்லையா! பிறகு என்ன செய்தீர்கள்?'' என்று வெகு ஆத்திரமாகக் கேட்டாள்.

நாயுடு:—அடாடா! என்ன ஆத்திரம். நான் உடனே திமிறி விட்டால் அதில் ஸ்வாரஸ்யம் என்ன இருக்கிறது. இந்த கட்டடம் மட்டுமல்ல. இன்னும் கொடிய சுண்ணாம்பு காளவாயில் போட்டாலும் சகித்துக்கொள்வதோடு நானே ஜெயம்பெற்று உங்களைத் தோற்கச்செய்வேன். என்ன விதமான தந்திரமும் இங்கு பலிக்காது என்பதை தைரியமாக நடத்தையில் நிரூபித்துக் காட்டும் பொருட்டாகத்தான் சும்மாவிருந்தேன். நான் என்ன முட்டாளா!

அவர்கள் கட்டிடம் கட்டி முடிவதற்குள்ளேயே பலமான சந்தோஷத்துடன் ஆரவாரித்துப் பாடிக் குதிக்க வாரம்பித்தார்கள். நான் உள்ளிருந்தபடியே கயிற்றை மெல்ல பல்லால் கடித்துக் கடித்துப் பிச்சி எறிந்தேன். அவர்கள் கூத்தாடிக்கொண்டிருக்கையில் மெல்ல அக்கட்டிடத்தை ஒரு தள்ளு தள்ளினேன். செங்கல் வேறு மண் வேறாகச் சிதறியது.

தூணைப் பிளந்துகொண்டு வந்த நரஸிம்மாவதாரத்தைப் போல நான் உள்ளிருந்து தபீரென்று குதித்தேன். என்னைப் பார்த்ததும் நடுநடுங்கிப் போய்விட்டார்கள். ஒரே நிமிடத்தில் அவர்கள் கையிலிருந்த துப்பாக்கியையே சமயம் பார்த்துப் பிடுங்கிக் கொண்டு இங்கு நீ செய்திருப்பதுபோல சுட்டுக்கொண்டே வருகையில் நம்முடைய ஆள் போலீசாருடன் தயாராக வந்துவிட்டான். போலீஸாரிடம் காட்டிக் கொடுத்துவிட்டேன். சகலமான தகவல்களையும் கூறி திருட்டை விளக்கிவிட்டேன்.

இதற்குள் நீ அனுப்பிய கோபாலன் வந்தான். எனக்கு யாதொரு ஆபத்துமில்லை என்று நடந்ததைக் கூறினேன். நான் மயக்கமாக இருக்கையில் "இன்னும் அனுப்பிய ஆட்கள் வரவில்லையே! அந்தச் சிறுக்கி அம்புஜத்தைக்கொண்டு வரவில்லையே!'' என்று பேசிக்கொண்டதிலிருந்து உனக்கும் உலை வைத்திருப்பதை யறிந்தேன். ஆகையினால் போலீஸாரிடம் அந்த விவரங்களை ஒப்புவித்துவிட்டு நான் உன்னை மீட்கும்பொருட்டு ஓடி வருகிறேன். கடவுள் கிருபையினால் நமது நாடகம் முடிவடைந்து விட்டது. இனிமேல் உன் குருவிக்கார வேஷத்தைக் களைந்துவிட்டு சாதாரண அம்புஜமாகி விடு. இவர்களை ஏன் நாம் காவல் காக்கவேண்டும். இதோ போலீஸாரும் கூட வந்திருக்கிறார்கள். அவர்கள் காப்பார்கள். வா போவோம்.'' என்று கூறி போலீஸாரிடம் அவர்களைக் காட்டிக் கொடுத்துப் பின்னர் அம்புஜத்தை யழைத்துக்கொண்டு தான் வந்த மோட்டாரிலேயே ஏறிக்கொண்டு கிளம்பிவிட்டார்.

அம்புஜத்திற்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. தன் பிதாவின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்து வியந்து தனக்குள் பூரித்தாள். "அப்பா! இந்த ரயில்வே திருட்டை மிகவும் அல்பமாக எண்ணினேமே! பார்த்தீர்களா! எதை நாம் மிகவும் அல்பமாகவும் சுலபமாகவும் எண்ணுகிறோமோ! அதில்தான் பெருத்த சிக்கலும் பேராபத்துகளும் விளைகின்றன. கல் சுவற்றில் தங்களைக் கட்டிடம் கட்டுவது என்றதைப் படித்ததும் என்னை யறியாது என் தேகமும் மனமும் பதறித் துடித்தன. என்ன செய்வேன் என்று தத்தளித்தேன். பிறகுதான் ஆளையனுப்பினேன். கடவுளின் பாதத்தை நம்பி அவனிருக்கிறான்; காப்பாற்றுவான் என்கிற தைரியத்துடன் வேலை செய்தால் கட்டாயம் ஜெயமே பிறக்கும் என்ற உங்கள் வேத வாக்கை ஒவ்வொரு கேஸிலும் பார்த்துக்கொண்டே வருகிறேன். அப்பா! இந்த சாதாரண திருட்டில் உத்ஸாகமில்லாமல் வேலை செய்தும் ஜெயம் கிடைத்துவிட்டது.'' என்றாள்.

நாயுடுவும் துப்பறியும் நுண்ணிய விஷயங்களை அம்புஜத்திற்கு உபதேசம் செய்துகொண்டே போனார். யாத்திரைக்கு முன்னே

நின்று அழைத்துச் சென்ற மனிதனுக்குச் சரியானபடி பரிசுகள் சர்க்காரால் வழங்கப்பட்டன. மற்ற குற்றவாளிகளையும் சட்டப்ப டிக்கு தண்டித்ததோடு நாயுடுவுக்கு தக்க மரியாதை செய்து பாராட் டினார்கள். அவன் களவாடிய பணமும் பொருளும் அந்தந்த மனி தர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டன. அந்த முறையில் நாராயண னுடைய தாயார் கோம்பிளிப்பாட்டியின் பணம் 300 ரூபாயில் செலவுபோக மிச்சம் 275 ரூபாயிக்கு மேல் நாராயணனுக்கு திடீ ரென்று கிடைக்கப்பெற்றது. அதிர்ஷ்ட தேவதையின் அதிசயமான ப்ரவேசத்தின் பலன் கைவிட்ட பணமும் வந்து சேர்ந்துவிட்டது.

சீதாவுக்கு நாட்கள் செல்லச் செல்லத்தான் தன்னுடைய ஆதி காலத்து அசட்டுத்தனமும், மூர்க்க குணமும் நன்றாகத் தெரிந்து வருத்தமேற்பட்டது. தான் ஒரு பட்டுப்புடவைக்கு ஆசைப்பட்டத னாலன்றோ தன் காலே உடைந்து நொண்டியாகிவிட்டது. தனது மூர்க்க பிடிவாதத்தினாலன்றோ, தன் குடும்பமே சிதறுண்டு சீரழிந்து கண்ணியமிழந்து வறுமை வாய்ப்பட்டுத் தவிக்கலாயிற்று. இனியா வது புத்தியுடன் பிழைக்கவேண்டும். சினிமாவில் நடிப்பதற்கு தனக் கும் ஓர் நொண்டி வேடம் கிடைத்தால் நடிக்கலாம் என்றும் வெகு வெகு விசித்திரமான மாறுதல்கள் உண்டாகிவிட்டன.

அவளுடைய நடையுடைபாவனை முற்றும் அடியோடு மாறி நூதன முறையில் உயிர் பெற்றுவிட்டன. தன்னுடைய மகளுக்கு எதிர்பாராதவிதமாகத் தகுந்த கணவன் கிடைத்ததும் ஆயிரக் கணக் கில் பணம் கிடைத்ததும் பெரிய வியப்பிலும் வியப்பாகி சந்தோஷ சாகரத்தில் மூழ்கினாள். தன் மகளும் மருமகனும் தினம் நடிக்கும் அழகைக் கண்டு களிப்பதில் பெரும் ஆவலும் த்ருப்தியும் கொண்டு தினம் அவர்கள் நடிப்பதைப் பார்த்துக் களிப்பாள்.

அக் கதையில் முக்கியமான ஒரு பாகத்தை நடிக்கும் அன்று சினிமா முதலாளி சில ப்ரபலஸ்தர்களையும் முக்கியமானவர்களையும் நேரில் வைத்துக்கொண்டே அந்த பாகத்தை சந்திராவையும் அச்சுத னையும் நடிக்கச்செய்து அதைப் படமெடுக்க உத்தேசித்தார். ஏனெ னில் அந்த பாகத்தில் இவர்களின் நடிப்புத் திறமையும் உணர்ச்சி ததும்ப உண்மையிலேயே அனுபவித்து சந்திரா தன் ஆபத்து வேளை யில் நடிப்பதும் சினிமா முதலாளியை வியக்கச் செய்துவிட்டன. தான் கட்டாயம் இம் முதல் படத்திலேயே பெரும் புகழும் கீர்த்தி யும் தகுந்த லாபமும் நன்மதிப்பும் பெற்றுவிடலாம் என்ற நம்பிக் கையை அடைந்துவிட்டான்.

ஆதலால் நடிகர்களுக்கு பின்னும் உத்ஸாக மூட்டும் பொருட்டு

அன்று அவ்வாறு தயார் செய்தான். கதாநாயகியாகிய ஏழைப் பெண்ணை அதமக்காரப் பாவி ஒருவன் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு கத்தியால் குத்த முயலுகிறான். அதே சமயம் கதாநாயகன் வியர்க்க, விலுவிலுக்க ஓடிவந்து அவன் பின்புறமாக நின்று இரு கைகளையும் பிடித்துத் தடுத்துவிட்டு கதாநாயகியைக் காப்பாற்றுகிறான்.

இந்த பாகத்தில் அந்த அக்ரமக்காரனின் ஆவேசத்துடன் கோபாக்கினி கிளம்பும் திறமையான நடிப்பும், கதாநாயகி தன் மனத்தையுங் கரையச்செய்யும் வண்ணம் பயமும் சோகமும் திகைப்பும் ஒருங்கே அமைய வெகு சாமர்த்தியமாகக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியவாறு அதி யாச்சரியமாக நடித்ததும் சபையோரை சிரக்கம்பம் செய்யும்படி யாக்கிவிட்டன.

கதாநாயகன் அபாரமான வீரத்துடனும் தைரியத்துடனும் அத்துஷ்டனைத் தடுத்து கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டு அவனை குண்டு கட்டாகக் கட்டி உதைத்து த்வம்சம் செய்த அழகான்து சபையோரைப் பரவசப்படுத்தி மெய்மறக்கச் செய்து விட்டது. சபையோர்கள் கரகோஷம் செய்து அச்சுதனையும் சந்திராவையும் வெகுவாகப் பாராட்டி பின்னும் உத்சாகத்தை அளித்து ஊக்கினர்கள்.

இந்நாடகத்தை நடிக்க ஆரம்பித்து மூன்று மாதங்களில் முடிவடைந்தது. அம் மூன்று மாதங்களுக்குள் நாராயணனுடைய கூரை வீடு சிறிய மெத்தைவீடாக மாறியது. இந்த மாறுதலைக் கண்ட ஊர் ஜனங்களில் வயிற்றெரிச்சல் படுவார்கள் சிலரும், 'ஏதோ பாவம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான், கடவுள் கிருபையால் ஏதோ நல்ல வழியில் அவன் கஷ்டம் தீர்ந்தது'' என்று அனுதாபப்படுவார்கள் சிலரும், சினிமாவில் நடித்ததைக் குற்றமாகப் பாவித்துப் பழித்தவர்கள் சிலருமாக உலகம் பலவிதம் என்ற முறையில் வார்த்தைகள் கிளம்பின.

இந்த முதல் படத்திலேயே வெகு திறமையாக நடித்து எல்லோரும் போற்றக்கூடிய நன் மதிப்பை அச்சுதன் பெற்றுவிட்டானுகையால் இன்னும் பல சினிமாக்காரர்களின் கண்ணேட்டம் அவன்மீது பாய்ந்தது. இதற்குக் காரணம் அதிருஷ்டதேவதை என்ற இந்த முதல் படம் ஒரே தினத்தில் பல முக்கியமான நகரங்களில் ஒரே காலத்தில் காட்டவாரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு கொட்டகையிலும் போலீசார் வந்து அத் திரளான கூட்டத்தை அடக்கும்படி நேர்ந்ததே யாகும். பத்திரிகைகளும், ஸினிமா ரசிகர்களும், நடிகப் பிரியர்களும் இவ் வதிருஷ்ட தேவதையைப் பற்றி அபாரமான புகழுரைகளை வழங்கினர்கள். இக்கதையில் கதாநாயகனும், நாயகியுமாகத் தோன்றிய அச்சுதனும், சந்திராவும் முறையே ஸ்ரீமான் அச்சுதன், ஸ்ரீமதி அச்சுதன் என்ற பெயராலேயே பொதுமக்களால் நன்கு மதிக்கப் பட்டார்கள். இளம் தம்பதிகள் காதலும் கருத்தும் ஒருமித்து, ஏகோபித்த மனத்துடன் ஒழுக்கந் தவருது, இழுக்கத்தில் புகாது பெருந்தன்மையாயும் புகழத்தக்க முறையிலும் நடித்திருக்கும் பெருமையை உலகம் வெகுவாகக் கொண்டாடத் தொடங்கியது.

முதன் முதல் தயார் செய்த படத்திற்கு "அதிர்ஷ்ட தேவதை'' என்று வைத்த பெயருக்கேற்ப அது சினிமா முதலாளிக்கும் சினிமாவில் நடித்தவர்களுக்கும், சினிமாக் கம்பெனிக்காரருக்கும் எதிர் பாராத முறையில் அதிர்ஷ்ட தேவதையே ப்ரஸன்னமாகிவிட்டது

போலாக்கியது. சினிமா முதலாளி அச்சுதனையும் அவன் மனைவியை யும் வெளியாருக்கு விட்டுக் கொடுக்க இனி சம்மதிப்பானு!

தானே இரண்டாவது படம் இன்னும் சீரிய முறையில் தயா ரிக்க ஆரம்பித்துவிட்டான். அதில் இவ்விளந்தம்பதிகளுக்கு சற் றும் தியங்காமல் மனப்பூர்வமான சந்தோஷத்துடனும் த்ருப்தியுட னும் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அக்ரிமெண்டு தயாராகி விட்டது. அச்சுதனின் கீர்த்தியும், சந்திராவின் கீர்த்தியும் பெருகி யது. தாம் இவ்விரண்டாவது படத்தில் பின்னும் அதிகமான ஊக் கத்துடன் நடித்தும், பாடியும் பின்னும் அபாரமான புகழைப்பெறு வதற்கே இருவரும் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

அச்சுதன் தான் வந்த நாள் முதல் தன் பெற்றோர்கள் மிக்க விசனத்தில் மூழ்கித் தவிப்பதை தனது ஆப்த நண்பன் மூலம் விசாரித்துக்கொண்டே இருந்தான். இந்த சினிமா முடிவுபெற்ற தும் இரண்டாவது படத்திற்கும் கையில் அட்வான்ஸ் வாங்கிவிட்ட தால் 15 ஆயிரம் ரூபாயில் ஓர் பங்களாவை வாங்கி அதற்குண்டான அலங்காரங்களைச் செய்து ஓர் சுபதினத்தில் க்ரகப்ரவேசம் செய்ய நாள்பார்த்துவிட்டான்.

மிச்சமுள்ள ரொக்கத்தை நோட்டாகவும், பணமாகவும் மாற்றி இரு தட்டுகளில் வைத்துக்கொண்டான். ஏற்கெனவே தன் நண்பனை கிராமத்திற்கு அனுப்பி தன் பெற்றோர்களை, அச்சுதன் திரும்பிவந்து விட்டதாயும் தங்களை யழைப்பதாயும் அழைத்துவர ஏற்பாடு செய்திருந்தான். அவ்வாறே அவன் சென்று அவர்களிடம் தெரிவித்ததும் தாங்கமாட்டாத சந்தோஷத்துடன் "இனி எங்க ளுக்கு வரதக்ஷிணையும் வேண்டாம். மண்ணும் வேண்டாம். எமது மகனைக் கண்டு களித்தால் போதும்'' என்று புலம்பிக்கொண்டே தாம் செய்ததைக் குறித்து விசனித்தவாறு வந்தார்கள்.

அச்சுதன் பங்களாவின் வீதியில் வாழை முதலிய தோரணங் களால் அலங்காரம் செய்யப்பட்டு பாண்டும் மேளமும் வாசித்து தேவலோகம்போல ப்ரகாசிக்கின்றன. பல பெரிய ப்ரமுகர்களும் சினிமா முதலாளியும், நாராயணனும், இன்னும் முக்கியஸ்தரும் உட்கார்ந்திருந்தார்கள்.

கிழவரும் கிழவியும் இந்த அலங்காரத்தைப் பார்த்து " இதென்ன இடம். கல்யாண வீடு போலவிருக்கிறதே! இங்கா அச்சுதனிருக்கிறுன். அப்பனே! அச்சுதா! அச்சுதா! மூடத்தனத் தினுல் நாங்கள் செய்த பிழையைப் பொறுப்பாயாக. அச்சுதா!'' என்று கண்ணீர் விட்டுக்கொண்டே வந்தார்கள்.

அதே சமயம் அச்சுதன் ஒரு தட்டும், சந்திரா ஒரு தட்டுமாக பணத்தைக் கிழவர், கிழவிக்கு முன்பு வைத்துவிட்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அச்சுதன் அவர்களை நோக்கி, "என்னருமை அம்மா! அப்பா! இதோ! நீங்கள் விரும்பிய வரதக்ஷிணை. இதோ இந்த பங்களா உங்களுடையது. இதோ இவளே உங்கள் மருமகள். இதோ இவர்கள்தான் இவளுடைய பெற்றோர்கள். சந்தோஷந்தானு! உங்களுக்கு: பெற்ற பிள்ளையை விடப் பெண் வீட்டாரைக் கொள்ளையடிக்கவிருந்த செய்கையும், பணமும் தானே ப்ரதானமாக விருந்தன. இதோ! அந்த ப்ரதானங்கள் முற்றும் இருக்கின்றன. பெற்றுக்கொண்டு மகிழுங்கள். ஆனால் நீங்கள் கொள்ளையடிக்க முயன்ற முறையில் இதைக் கடவுள் எனக்களிக்கவில்லை. என்னுடைய சொந்த உழைப்பைக் கொண்டு இதை சம்பாதிக்கும்படி உயர்ந்த மார்க்கத்தைக் கடவுள் காட்டி அருளும் பாலித்தார். எப்படியானுல் என்ன? நீங்கள் வேண்டுவது பணந்தானே! இனியாவது பிறரைக் கொள்ளையடிக்கும் அல்ப புத்தியை ஒழிப்பீர்களா! "என்று சற்றும் தியங்காமல் கூறினுன்.

இதைக் கேட்ட இருவரின் முகங்களும் கவிழ்ந்தன. அவமானமும் துக்கமும் தாங்க முடியவில்லை. அச்சுதனை சேர்த்து கட்டிக்கொண்டு "அப்பா! அச்சுதா! நீ சிறியவனுக விருப்பினும் புத்தியில் பெரியவனுகி எங்களுக்கும் உபதேசம் செய்துவிட்டாய். நாங்கள் செய்த காரியத்தைப்பற்றி நாங்கள் பட்ட அவஸ்தை எங்களுக்குத்தான் தெரியும். இனி புத்தி வந்தது. பிள்ளை வீட்டார் கொள்ளைக்காரர்கள் என்று பெயர் பெற்றுத் திரியாமல் நியாயமான முறையில் வாழவேண்டுமென்பதை யறிந்தோம். இனி எங்களைச் சுட்டிக் குறை கூறுதே! இவர்கள் யாரு. உனக்கு விவாகம் எப்போது ஆயிற்று. அந்த வைபவத்தை மகா பாவிகளாகிய நாங்கள் பார்க்கப் பாக்கியம் செய்யவில்லையா! என்ன மதியீனம்! என்ன மதிமோசம் போய் விட்டோம்!" என்று கண்ணீர் வழிய விசனித்தபடியே சந்திராவை இறுகத் தழுவிக்கொண்டாள்.

சினிமா முதலாளி நகைத்துக்கொண்டே "பெரியோர்களே! நடந்ததைக் குறித்து இனி கவலை வேண்டாம். உங்கள் மைந்தனுக்கு சாஸ்திரப்படி நடக்கும் விவாகத்தை கண்ணுற இன்றே மீண்டும் கண்டு களிப்புறலாம். அதன் பிறகு உங்களுக்கு விவரங்கள் தானே விளங்கிவிடும்." என்றார். அன்று எல்லோரும் வெகு சந்தோஷமாக க்ரகப்ரவேச மகோத்ஸவத்தைக் கொண்டாடிப் பின் அன்று மாலையிலேயே "அதிர்ஷ்டதேவதை" என்ற படம் 5-வது வாரம் அதிக சந்தோஷத்துடன் ஓடுவதை அச்சுதன் பெற்றோருக்குக் காட்ட அழைத்துச் சென்றார்கள்.

ஏற்கெனவே அச்சுதனும் சந்திராவும் இன்று மேடையில் நேரில் தோன்றி ஒரு அருமையான கீதம் பாடுவார்கள் என்று நோட்டீஸ் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் விளம்பரப்படுத்தி இருந்ததால் கொட்டகையில் கூட்டம் எள்ளு போட்டால் விழ முடியாது கூடிவிட்டது. அச்சுதனும் சந்திராவும் இருவருடைய பெற்றோர்களுடன் குறித்த நேரத்தில் கொட்டகைக்கு வந்தார்கள்.

அச்சுதனின் பெற்றோருக்கு விவரங்கள் ஒன்றுமே விளங்க வில்லை. எல்லாம் குழப்பமாயும் பூடகமாயுமிருக்கின்றன. கேட்பதற் கும் அஞ்சிகைப் பட்டார்கள். "எப்படியாவது போகட்டும்; இழந்து விட்ட பிள்ளையைக் கண்டு களித்தாயிற்று. எதிர்பார்த்ததைவிட அதிக செல்வமும் கிடைத்துவிட்டது. இனி என்னவேண்டும்? எல் லாம் தானுகத் தெரியட்டும்'' என்று பேசாமல் கொட்டகைக்கு வந்து உட்கார்ந்தார்கள்.

ஜனங்கள் எல்லாம் அச்சுதன் வரவையே ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கதை ஆரம்பமாயிற்று. முதன் முதல் அச்சுதன் கையில் புத்தகங்களை எடுத்துக்கொண்டு காலேஜுக்குச் செல்லும் காட்சி திரையில் வந்ததும் ஜனங்கள் கர கோஷம் செய்து ஆரவாரித்தார்கள். படத்தில் அச்சுதனைக் கண்ட தும் அவன் பெற்றோர்கள் "அதோ! அதோ! அச்சுதன்......அச் சுதா! அச்சுதா! நீயா ஆடி இருக்கிறாய்.....என்று ஆச்சரியக்கட லாடி அதை இமைகொட்டாது பார்த்திருக்கையில்,

அடுத்த காட்சியில் கதாநாயகியாகிய சந்திரா கையில் கஞ்சி யுடன் தன் தாயாரை நாடிவந்து அந்த கஞ்சியைச் சாப்பிடச் சொல் லுகிறாள். தாயாரோ மிகவும் விசனத்துடன் "ஊம். எனக்கு கஞ்சி யும் வேண்டுமா. உன்னைக் கட்டிக்கொடுத்துக் கண்ணாரக்கண்டு களிக்கும் பாக்கியம் பெறாது இறந்துவிடப் போகிறேனே: பாழும் வறுமை தேவதை நம்மைப் பீடித்ததே யன்றி அதிர்ஷ்ட தேவதை காத தூரத்திற்குமேல் விலகி இருக்கிறாளே. கண்மணீ! பாழும் வரதக்ஷிணையல்லவோ உலகில் தொத்து நோய்போலப் பரவி விட் டது. பரம ஏழையாகிய நான் என்ன செய்வேன்? பிள்ளையைப் பெற்ற பாவிகள் பெண்வீட்டாரைக் கொள்ளையடிப்பதையே தமது கண்ணியமாக நினைக்கிறார்களே!

பெண்களைப் பெற்றவர்கள் எத்தனை துன்பப்படுகிறார்கள் என் பதை யவர்கள் கவனிக்கிறார்களா! என்ன செய்வேன்?'' என்று கண் ணீர் விடுகிறாள். தம் மருமகளையும் பார்க்கிறார்கள். படத்தையும் பார்க்கிறார்கள். படத்தில் ஒன்றன்பின் ஒன்றாக பிள்ளை வீட்டார்

சீர்வகைகள் வாங்கும் அனியாயமும், வரதக்ஷிணை கேட்கும் அலங்கோலமும், பெண்வீட்டார்கள் கொடுக்கச் சக்தியின்றி பலவகையகாக் கஷ்டப்படுவதும், சிலர் தற்கொலை புரிந்துகொள்வதும், சிலர் கெட்டுப் பாழாவதும், பிள்ளைவீட்டார் பெண்ணைத் தள்ளிவைப்பதும் அப் பெண்கள் துன்பப்படுவதும் திரையில் வருவதைக் காணக்காண அச் சுதனின் பெற்றோர்களின் உள்ளத்தில் தாக்கி அவமானம் தலை எடுக்க முடியாமல் செய்கின்றது. அருகிலிருக்கும் தன் மகளைப் பார்க்கவும் வெட்கி விழித்துத் தத்தளிக்கின்றார்கள். இதைக்கண்டு அச்சுதனும் சந்திராவும் சந்தோஷப் பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

23-வது அதிகாரம்

த்ரிசங்குச் சோர்க்கம்—தீர நடிக சிங்கம்

ஜானகியைத் தாங்கி தம் மகள் நிற்கவும், ஜானகிக்குப் பரிந்தும், தங்களை அலக்ஷியம் செய்தும் மகனே பேசுவதானது இவர்களுடைய கோபத்தைக் கிளறிவிட்டது "ஆஹா! அடே துஷ்டப்பயலே! அடீ விஜயா! நீ எங்கேயோ நாத்தனார் வீட்டுக்குப் போவதாகக் கூறிவிட்டு இம் மாதிரியே திருட்டு வேலைக்குக் கைகொடுத்து காரியம் செய்கிறாய். சீச்சீ! துஷ்டக்கழுதைகளே! கெட்டுப் போனவர்களுக்குப் பரிந்து பேசும் உங்களுக்கு மானமில்லையா! வெட்கமில்லையா! புத்தியில்லையா!" என்று தாறுமாறாக உளறிக்கொண்டே வருகையில் பத்மநாபன் இடைமறுத்து,

"போதும்! போதும்! உங்கள் உபன்யாசத்தை நிறுத்துங்கள். ஊராரிடம் பகல் கொள்ளையடிக்கவும், ஓர் உத்தமப்பெண்ணை உடல் எரியச் செய்யவும், ஓர் குடும்பத்தை அடியோடு கெடுக்கவும், பெண்மேல் பெண்ணைத் தேடவும் கண்ணியமான நீங்களிருவரும் வெட்கமின்றி, மானமின்றி, புத்தியின்றி முன்னேவந்து அதையே கண்ணியமாயும் பெருமையாயும் செய்யும் உங்கள் செய்கையை விட வேறு ஒன்று உள்ளதா!

உம்முடைய அனியாயங்கள் உமக்கு நியாயமாகப்படும் போது பிறருடைய நியாயங்கள் யாவும் அனியாயமாகத்தான் தோன்

றம். இதுதான் உத்தமர்களின் செய்கைக்கு லக்ஷணம். போதும் வாயை மூடும். இதுகால பரியந்தம் நீர் ஆட்டிய ஆட்டத்தில் கட்டுப்பட்ட பம்பரமாக விருந்தபடி இனியும் ஆடுவேன் என்று எண்ண வேண்டாம். இனிமேல் உங்கள் பாச்சா பலிக்காது அன்று ஒரு தினம் ரங்கன் வீட்டில் நீங்களிருவரும் வந்திருக்கையில் நானும் என் தர்மபத்தினியும் உள்ளிருந்தபடியே, நீர் சுகந்தவல்லியிடம் தெருத் திண்ணையில் உட்கார்ந்து சொல்லியது சகலத்தையும் கேட்டுக் கொண்டே தானிருந்தோம். உங்கள், சூதும் வாதும், வஞ்சனையும் சூனியக்காரனின் சகவாஸமும் யாவும் இனிமேல் மறைக்கமுடியாது வெட்ட வெளிச்சமாகிவிட்டன. உங்கள் பாழும் கொடிய செய்கையினால் இதுகாறும் அந்தகாரத்தில் திளைந்தோம். இனி நாங்கள் இன்பஜோதியைக் கண்டு மகிழ்ந்து உங்கள் மோசத்தை யறிந்தோம். மரியாதையாக நடந்தால் மரியாதையுண்டு. இல்லையேல் வந்தவழியோடு செல்லாம். ஜானகியை இனி கைவிடமாட்டேன். கல்யாணத்தில் இவர்களிடம் நீங்கள் கொள்ளையடித்த பணத்தையும் வட்டியோடு இவர்களிடம் சேர்த்துவிட்டு மறுகாரியம் செய்யுங்கள்.'' என்று பத்மநாபன் பட படத்துச் சற்றும் தாக்ஷண்யமின்றி பேசிவிட்டான்.

பெண் கொடுப்பதற்காகக் கூட வந்த மனிதர் சுதர்சனத்தை நன்றாகத் திட்டி ஏசிப் பேசி "அடாடா! அனியாயமாய் ஒரு பெண்ணை வதைத்துவிட்டு இன்னொரு பெண்ணை பேரம் பேசி பெண் வீட்டினரைக் கொள்ளையடிப்பதற்காகவா இம் மகானுபாவன் துணிந்துவிட்டார். வெட்கங்கெட்ட பிழைப்பு பிழைப்பதை விடச் சாகலாமே! உங்களைப்போன்ற பாவிகளால்தான் உலகத்தில் பெண்களின் கதி அதோகதியாவதோடு சமூகத்திற்கே வரதக்ஷிணை என்கிற தொத்து வியாதி பரவி வருகிறது.

ஊம்! இனிமேல் தெரிவித்தால் என்ன? நான் யாரு தெரியுமா! உண்மையில் உமக்குப் பெண் கொடுக்கும் சம்மந்தியல்ல. உம்முடைய மாப்பிள்ளை எனக்கு உமது ஊழல்களை எல்லாம் எடுத்துக் கூறி, உம்மை ஏமாற்றி அவமதிப்பதற்காகவே இச் சமயத்தை விஜயாவின் மூலம் அறிந்து என்னை யனுப்பினர். நான் சாதாரண மனிதனல்ல. ஓர் பெரிய குடும்பி. போலீஸ் உத்யோகஸ்தன். நீர் இம்மாதிரி காரியங்களைச் செய்வதற்கு ஓர் மந்திரக்காரனை கைக்குள் போட்டுக்கொண்டு அக்ரமம் செய்து வருவதை யறிந்தோம். கடன்காரனுக்காக பாண்டிச்சேரிக்கு பயந்து ஓடச்செய்த மனிதனை கைதியாக்கிவிடத் தக்க ஆதாரங்களுடன் ஏற்பாடாகிவிட்டது. நான் வெறும் மனிதன்போல உம்முடன் கூடவே வந்து உமது நாடகத்தைப் பார்க்க வந்தேன். பத்மநாபா! பேஷ்! இந்த அருமையான புத்தியை இனி கை நழுவ விடாதே!

விஜயவல்லி! பேயின் வயிற்றில் மாணிக்கம் பிறந்ததுபோன்று நீ உதித்து ஒரு குடும்பத்தைக் காப்பாற்றினாய். இதல்லவோ பெருந்தன்மை! இதல்லவோ உலகம் மெச்சத்தக்கது. நான் சென்றுவருகிறேன். சுதர்சனம்! இனியாவது கொள்ளையடிக்கும் புத்தியை விட்டுவிடும்.'' என்று கூறிவிட்டு எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

சுதர்சனத்தின் ஆத்திரமோ அடங்கவில்லை. தலை தெரியாது பொங்குகிறது. தன் வயிற்றில் பிறந்த இருவருமே தனக்கு விரோதியாகிவிட்டதை எண்ணிச் சகிக்க முடியவில்லை. போதாக் குறைக்கு மருமகப்பிள்ளையும் தன்னை அவமானம் செய்யும் பொருட்டு ஆளையனுப்பியதானது எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோலவிருந்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் கோபத்தில் ருத்திரன், குரு, விச்வாமித்திரனைப் போல ஆவேசத்துடன் "ஆஹா!... அப்படியா செய்தி! உங்களுடைய கொழுப்பு இத்தனை தூரமா மிஞ்சிவிட்டது. ஆகட்டும் ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறிக்கொண்டே அவ்விடத்தில் நிற்காமல் தன் மனைவியுடன் தடதடவென்று போய் விட்டான்.

"போகட்டும். இப்போது நாம் பலவந்தம் செய்தால் இன்னும் அதிகமாகத் தலை தள்ளுவார். இந்த விஷயமறிந்து நான்கு பேர்கள் நன்றாகக் கூறினால் அப்போதுதான் புத்தி வரும்.'' என்று விஜயவல்லியே கூறிவிட்டாள். அங்கிருந்து கிளம்பிய சுதர்சனம் அவ்வூரிலேயே முன்பு இறங்கியிருந்த வீட்டிற்குச் சென்று நடந்த விவரங்களைக் கூறி தாண்டவமாடுகிறார். சண்பகவல்லியம்மாளும் அடங்கா ஆத்திரமும் அவமானமும் அடைந்து தத்திக் குதித்து தாண்டவமாடுகிறாள். தன் பெண்ணையும் பிள்ளையையுமே கண்டபடி திட்டிக்கொண்டே இனிமேல் என்னசெய்வது.........என்று யோசித்துக்கொண்டே தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

ரயிலில் வரும்போது அதிலிருந்த சிலர் பேசுவது இவர்கள் காதில் விழுந்தது. அதை உற்றுக் கவனிக்க வாரம்பித்தார்கள். "பேஷான கதை, முதல்தரமான நடிகர்கள், போற்றற்குரிய சீன்கள். சினிமா பார்த்தாலும் இவ்வித சினிமாவல்லவோ பார்க்கவேண்டும். வரதக்ஷிணை வாங்கும் பிள்ளை வீட்டாராகிய கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்களே! அவர்களுக்குச் சரியான சவுக்கடி சார்! அப்படித்தான் வேண்டும். இந்த மாதிரி கதைகள் மூலம் எத்தனை பாமர மக்களின் உணர்ச்சியைக் கிளப்பி உபயோகமுறச் செய்யலாம் தெரியுமா! வரதக்ஷிணை வாங்கவேண்டுமென்று நினைப்பவன் இதைப் பார்த்தால் அவன் மனமும் வெட்கி திருந்திவிடும்.

அப்பப்பா! எத்தனை அனியாயங்கள் பாருங்கள். பிள்ளை வீட்டார் என்ற பெயரைப் பெற்றுவிட்ட மாத்திரத்தில் வரதக்ஷிணையைப் பற்றிப் பேசி பேரம் செய்வதுதான் முதல் கடமையாக எண்ணிவிடுகிறார்கள். கொடுக்கவில்லை என்றால் பெண்ணைத் தள்ளிவிடுவது, வேறு கல்யாணம் செய்வது. எத்தனை சித்திரவதை செய்வதற்கும் அஞ்சுகிறதில்லை. இதெல்லாம் எத்தனை விதங்களில் கதையின் மூலமே விளக்கிக்காட்டி இருக்கிறார்கள். இதைப் பார்த்த பிறகாவது அத்தகைய பேராசைப் பேய்களுக்கு புத்தி வருமா?'' என்று ஓர் கிழவர் உரைத்தார்.

எதிரிலிருந்த மற்றொருவர் அந்த கதாநாயகன் யாரு தெரியுமோ! பெற்றோர்கள் வரதக்ஷிணை வாங்கவேண்டுமென்று சொல்கிறார்களாம். மகன் கூடாதென்றானும். அதனால் சண்டை போட்டுக்கொண்டு போய்விட்டானும். பிறகு வரதக்ஷிணையின் அலங்கோலங்களையே விளக்கி சினிமா எடுக்கும் கம்பெனியில் அந்த மகனே சேர்ந்து தன் பெண்டாட்டி, மாமனார், நண்பன் முதலிய நல்ல பொறுப்பு வாய்ந்த மனிதர்களுடனேயே ஆடியிருக்கிறான். இந்த விஷயம் பல பத்திரிகைகளில் அதி யாச்சரியமாக வந்தது. அந்த நடிகர்களைப்பற்றிப் போற்றாதோர் கிடையாது. இச் சினிமாவைக் கொண்டாடாதவர்கள் கிடையாது. என்ன அற்புதம் சார்!'' என்று கூறினர்.

இவ் வார்த்தைகள் அந்த தம்பதிகளின் மனத்தில் ஆணிபோல பாய்கின்றன. அதை முக்யமாகப் பார்க்கவேண்டுமென்று இவர்களையறியாது ஓர் ஆவலும் உதித்தது. இதைப்பற்றியே பேசிக்கொண்டு ஊரையடைந்தார்கள். இச் சினிமாவைப் பார்ப்பதற்காக அன்றே கிளம்பி அது காட்டப்படும் ஊருக்கு வந்தார்கள்.

நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தபடி அச்சுதன் நேராக தோன்றப்போகும் அதே சினிமாவுக்கு இவர்கள் வந்து சேர்ந்தார்கள். டிக்கட்டு கிடைப்பதே ப்ரம்ம ப்ரயத்தனமாகிவிட்டது. உள்ளே சென்றால் உட்கார இடமில்லை. ஜன நெருக்கம் கூறத்திறமன்று. சினிமா ஆரம்பமாயிற்று. முதலில் அச்சுதனின் உருவத்தைப் பார்த்ததும் சண்பகம் அலறியவாறு "ஐயோ! இவன் என் தங்கை செங்கமலத்தின் மகன் அச்சுதனல்லவா!......ஆ!......இவனு சினிமா ஆடுகிறான்.........

ஐயயோ!....இவள் அந்த ஜானகியின் சித்தி மகள் சந்திராவல்லவா...இதென்ன அனியாயம். இவர்களா அந்த வரதக்ஷிணைக் கதையை நடித்தார்கள்.'' என்று தமக்குள் பேசி வியப்புக்கடலில்

மூழ்கியவண்ணம் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். வரதக்ஷிணை வாங்குவோரின் அட்டகாஸமும் அதைக் கொடுப்போர் படும் துன்பமும் கூற முடியாதவிதம் சித்தரித்துக் காட்டப்படுவதைக் காணக் காண முன்பு தெரிவித்ததுபோல அச்சுதனின் பெற்றோர்கள் அடையும் துன்பத்தைவிட அதிக அவமானமும் மனக்கொதிப்பும் இவர்களுக்கு ஏற்பட்டு வதைக்கின்றது.

தங்களையும் ஜனங்கள் இவ்விதம்தானே திட்டுவார்கள் என்ற உணர்ச்சி இதுகாறும் ஒரு சிறிதும் மனத்தில் தோன்றாத இவர்களுக்குத் தங்களையே அவர்கள் ஏளனம் செய்வதுபோலத் தோன்றுகின்றது. ஒருவர் முகத்தை யொருவர் பார்க்கிறார்கள். வரதக்ஷிணையைப்பற்றிக் கண்டித்து படத்தில் வரும்போதெல்லாம் ஜனங்கள் கைகொட்டி ஆரவாரம் செய்வதானது தங்களைப் பார்த்துத்தான் சிரிப்பதாக எண்ணிவிட்டார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை. தாங்கள் மருமகளைத் தள்ளிவைத்து விட்டு விவாகத்திற்குக் கோடித்ததுபோலவே கதையிலும் காட்டுவதைக் காண எவ்விதந்தான் இவர்களால் சகிக்கக்கூடும்! பல்லைக் கடிக்கிறார்கள். இஞ்சி தின்ற குரங்குபோல விழிக்கிறார்கள். இதற்குள் (இன்டர்வல்) பாதி காட்சி முடிவடைந்து விளக்குப் போட்டுவிட்டார்கள். மேடைமீது ஜகஜ்ஜோதியாக விளக்குகள் பொருத்தப்பட்டுவிட்டன. உடனே அச்சுதனும் சந்திராவும் மிகவும் சாதாரணமான உடையில் ஆடம்பரமின்றி நகைத்த முகத்துடன் ஒய்யாரமாக வந்து நின்று சபையோரை வணங்கினார்கள். இவர்களைக் கண்டவுடன் ஜனங்களின் கரகோஷம் வானைப் பிளந்தது எனலாம். புஷ்பமாலைகள் குவியல் குவியலாக இவர்கள் மார்பை யலங்கரித்தன. இளந் தம்பதிகள் இருவரும் அந்த நாடகத்தில் வரும் பாட்டையே வெகு ஆநந்தமாயும் உருக்கமாயும் பாடினார்கள்.

சபையோரின் பேராரவாரத்திற்கு எல்லையே இல்லை. ஓர் ப்ரமுகர் அன்று தலைமை வகித்துப் பேசுகையில் இச்சினிமா அமைந்திருக்கும் அதியற்புதத்தை மிகவும் பாராட்டிப் பின்னர் "சினிமா என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். நடிகர்கள் தங்களுடைய பரிபூர்ணமான மனத்துடன் தங்கள் கடமை நடிப்புதான் என்றதையுணர்ந்து தங்கள் முழுத்திறமையையுங் காட்டி முதல் படத்திலேயே அவர்களே எதிர்பாராத விதமான வெற்றி பெற்றிருப்பதானது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மிஸஸ் அச்சுதனின் நடிப்பில் ஓர் தனித்த கவர்ச்சித்தன்மையும் காம்பீரமும் பிரகாசிக்கின்றன. நடிப்புத்தொழிலில் இதுகாறும் வழக்கப்பட்டு உழலுபவரும் இந்த மாதுசிரோமணியின்

உயர்ந்த பாவங்கள் நிறைந்த சமயத்திற்கேற்ப நடை நொடி வார்த்தைகளைப் பேசி தக்கவாறு நடிப்பதைக்கண்டு வெட்கி தலை குனிய வேண்டிய அளவில் நடித்திருக்கிறார். இவருடைய மதுரமான தொனியின் அழகை ஒலிப்பதிவுக்காரர்கள் வெகு சுத்தமாயும் இயற்கையாயும் எடுத்திருப்பதனால் இது திரையில் காணும் சம்பவமாகவே தோன்றவில்லை. உண்மை நிகழ்ச்சியைப்போலவே இருக்கிறது.

இக்கதையின் முக்கிய கருத்து வரதக்ஷிணைப் பேயின் தாண்டவமாகும். இதன் ஆசிரியர் இந்த பாகத்தை எப்படி சித்தரித்தால் மக்களின் மனத்தில் பதியுமோ அதுபோலச் சித்தரித்து தரித்திர தேவதையை ஓட்டி அதிர்ஷ்ட தேவதையை நிலை நாட்டியிருப்பது மிக மிகப்போற்றற்குரியது. இத்தனை அழகான கதைக்கு ஏற்ற நடிகர்களைப் பொறுக்கிய சினிமா டைரக்டரின் சாமர்த்தியத்தை வியக்காமலிருக்க முடியுமா!

நடிப்பென்றால் இன்னதென்றறியாத கட்டைகள் திரையில் அலங்காரவதிகளாயும் அலங்காரபுருஷர்களாயும் தோன்றி, ஆபாஸமாகப் பாடியும் பேசியும் உணர்ச்சி ததும்பும் பாகங்களை எல்லாம் உருக்குலைத்து வெறுப்பு ஏற்படும்படியாக நடிக்கும் படங்களைப் பார்க்கையில் நான் அடைந்த கசப்பும் வெறுப்பும் இப்படத்தினால் அடியோடு மாறியது. இம்மாதிரி உயர்தரமான நடிகர்களைக் கொண்ட சமூகப் படம் வருடத்திற்கு ஒரு படம் பார்த்தாலும் போதும். தினம் ஒரு ஆபாஸக் குப்பை தோன்றுவதால் மக்களுக்குள்ள அறிவும் மங்கிவிடுகின்றது. கையிலுள்ள பணமும் சுரண்டப்பட்டுவிட்டு ஏற்கெனவே உள்ள ஏழ்மைத்தனம் போதாது இன்னும் ஓட்டாண்டியாகி விடுகிறார்கள்.

இப்படத்தைப் பார்த்த பிறகாவது வரதக்ஷிணைப் பேய்கள் ஒழியுமா! அக்கொடிய பழக்கங்கள் அறவே தொலையுமா! இத்தனை அருமையாக நடித்த இந்நடிக ரத்தினங்களுக்கு இந்த தங்கப்பதக்கமும் வைர மோதிரமும் பரிசளிக்கின்றேன். இவர்கள் இதுபோன்ற பல சமூக விஷயங்களடங்கிய கதைகளை இன்னும் திறமையாக நடித்து நாட்டிற்கு நலனையும், பொதுமக்களுக்கு நல்ல ஞானத்தையும் நாடகக் கலைக்கு ஓர் நல்லுயிரும் கொடுத்துவரவேண்டி எல்லாம் வல்ல இறைவனடி தொழுகின்றேன்.'' என்று பேசினார். கொட்டகையே அதிர்ந்து விடும்போல ஜனங்களின் கரகோஷம் எழுந்தது.

அச்சுதனும் சந்திராவும் வெகு மரியாதையுடன் வாங்கிக் கொண்டு வந்தனம் செய்து, மீண்டுமோர் பாட்டைப் பாடினார்கள்.

அச்சுதன் ஆவேசத்துடன் "பெரியோர்களே! சபையோர்களே! சிறியோர்களாகிய எங்கள் நடிப்பைப் போற்றுவது உங்கள் அன்பைக் காட்டுகிறதேயன்றி எங்கள் திறமையைக் காட்டவில்லை. எங்களிருவருடைய வேண்டுகோளாவது,—வரதக்ஷிணை என்கிற அந்தகாரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் மூழ்கித் தவிக்கும் இருள் உலக மக்களை விட்டு நீங்கி இன்பஜோதியை எல்லோரும் அடைந்து இனிது வாழ வேண்டும்—என்பதேயாகும்.

அன்பர்களே! கொடிய அரக்கன் இராவணனல்ல. கொடிய அரக்கன் சிசுபாலனல்ல. இரண்யனல்ல. துரியோதனனல்ல. கொடிய அரக்கனிலும் கொடியவன் வரதக்ஷிணை என்கிற அரக்கனே யாவான். அந்த அரக்கன் வயப்பட்ட எத்தனை குடும்பங்கள் சிதறின! எத்தனை பெண்கள் அனியாயமாய் மடிந்து கெட்டு அலைந்து நாசமுறுகிறார்கள். அந்த அரக்கனை அறவே ஒழியுங்கள். ஒழியுங்கள். தன் சொந்த சுய உழைப்பினால் கால் காசு சம்பாதித்தாலும் கண்ணியமாக வாழலாம். ஊரைக் கொள்ளையடித்து வாழ்வது வாழ்வல்ல. தாழ்விலும் கேவலமாகும்.

பெண்ணைக் கொள்வோரும் கொடுப்போரும் தேனும் பாலும் போல வாழவிடாது தடுப்பது இவ் வரதக்ஷிணையேயாகும். காதலரைக் களிக்கவிடாது மறைக்கும் முதலை இவ் வரதக்ஷிணையேயாகும். கொடிய காரியத்தை இன்று சந்தோஷமாகச் செய்தாலும் கடவுள் குருடனல்ல. இத்தகைய கொடுமை செயலை இனி புரியாதீர்கள். அதை விடுத்து விரட்டுவதே நீங்கள் என்னிடம் காட்டும் அன்பின் அடையாளமாகும். "வரதக்ஷிணை ஒழிக. இன்பவாழ்க்கை பெருகுக' என்று கூறி எல்லோருக்கும் வந்தனத்தைச் செய்துவிட்டு மின்னல் போல இருவரும் மறைந்தார்கள். கரகோஷம் செவிகளைச் செவிடுபடச் செய்தது.

சோதனையின் கொடுமை

அல்லது

செல்வமே சொர்க்கம்

உன்னத நீதிகளும், அநுபவங்களும் நிறைந்து, மனத்தை பரவசமுறச் செய்யும் துப்பறியும் நாவல். விலை ரூ. 1/8. சந்தா நேயர்களுக்கு ரூ. 1/4.

24.வது அதிகாரம்.

மங்களத் தோற்றம்—மங்கையர் ஏற்றம்

பத்மநாபன் ஜானகியை விட்டுச் செல்ல மனமின்றி பின்னும் சில தினங்களுக்கு லீவு போட்டுவிட்டு விஜயவல்லி, ஜானகி இருவருடனும் சந்தோஷமாக இருக்கத் துணிந்துவிட்டான். தன் மகளின் மனத்திலுள்ள அந்தகாரமான விசனமும் நீங்கப்பெற்று வாழ்க்கையின் முக்கியமான இன்பஜோதியை யடையப்பெற்று மகிழ்வாளா என்று ஏங்கிய வேணுவும், ருக்மணியும் அபாரமான சந்தோஷத்தை யடைந்து பொங்கிப் பூரித்தார்கள். ஜானகியின் பாட்டிக்கு இந்த உத்ஸாகத்தினால் அவளுடைய இழந்த பலமும் திரும்பிவிட்டது.

பத்மநாபன் சற்று சந்தோஷமாக ஜானகியைத் தேற்றும் பொருட்டு விஜயவல்லியுடன் பட்டினத்திற்கு வந்து சில தினங்கள் தங்கிவிட்டுச் செல்வதென்று அன்றே தீர்மானித்து மறுதினம் காலையிலேயே பிரயாணமானான். ரயிலில் வரும்போது பத்திரிகை படிக்கையில் அதில் அச்சுதனும் மிஸஸ் அச்சுதனும் நடித்த சினிமாவின் விமர்சனமும் இன்றைய தினம் பலான ஊர் தியேட்டரில் நேரில் இருவரும் வரப்போகும் விவரமும் கண்டிருந்ததைப் படித்ததும் பத்மநாபன் அபாரமான வியப்பும் ஆநந்தமும் அடைந்து "அக்கா! இதோ பார்த்தாயா! இந்த படங்கள். நமது அச்சுதன் சினிமாவில் நடித்திருக்கிறானாம். கதை வெகு அழகாக இருக்கிறதாம். கதையின் சாரம் முற்றும் வரதக்ஷிணையைப் பற்றியதாம். அதற்கு ஒருவர் விமர்சனம் வெகு அழகாக எழுதியிருக்கிறார். அக்கா! நாம் வழியில் அவ்வூரில் இறங்கிப் பார்த்துவிட்டுப் போகலாமா! என்ன ஜானகீ? என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

இரு பெண்மணிகளும் அதைப் பார்க்க இசைந்தார்கள். நேரே அவ் வூரில் இறங்கி ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு சினிமாவுக்கு வந்து சேர்ந்தார்கள். ஒருவர் வருவது ஒருவருக்குத் தெரியாமல் எல்லோரும் ஒரே ஸினிமாவில் கூடிவிட்டார்கள். சினிமாக் கதையும் நடிப்பும் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தன. பத்மநாபனுக்கோ அச்சுதன் நேரே பேசும்போது தானே சென்று அவனைத் தட்டிக்கொடுத்துத் தன் உத்ஸாகத்தைத் தெரிவிக்கவேண்டுமென்ற ஆவல் தூண்டுகிறது. கதை முடியும் வரையில் பார்த்துப் பிறகு போகலாமென்று பொறுமையாக விருந்தான்.

சினிமாவும் முடிவடைந்தது. கதையின் முடிவு சீன் வெகு அற்புதமாகவிருந்ததால் சபையோர்கள் பரவசமாகிவிட்டார்கள். அச்சுதனின் தாயும் தந்தையும் கட்டு மீறிய சந்தோஷத்துடன் அச்சுதனையும் சந்திராவையும் கட்டித் தழுவினார்கள். அச்சுதன் அங்குள்ள உயர்ந்த இடத்தில் (பாக்ஸில்) உட்கார்ந்திருப்பதையறிந்து பத்மநாபனும் அங்கு விரைந்து சென்றான். அதே சமயம் பத்மநாபனின் பெற்றோரும் அங்கு வந்தார்கள். ஒருவரறியாமல் ஒருவராய் எல்லோரும் ஒரே இடத்தில் கூடியதும், ஒருவரையொருவர் கண்டு கூறத் திறமற்ற ஆச்சரியமும், பூரிப்பும் அடைந்து திகைப்பூண்டை மிதித்தவர்கள்போலாகிவிட்டார்கள்.

தமது பெற்றோர்களும் இங்கு வருவார்கள் என்பதை சொப்பனமும் காணவில்லையாதலால் பத்மனாபனுக்கும், விஜயாவுக்கும் வியப்பு பொங்கியது. விஜயா நகைத்துக்கொண்டே "அம்மா! சினிமா எப்படி இருந்தது? உங்கள் சரித்திரங்கூடக் கதையாக வந்துவிட்டது பார்த்தாயா! இக் கதையில் வரதக்ஷிணையையும் அதை வாங்குவோரையும் எப்படிப் பழித்து இழித்துத் திட்டினார்களோ அப்படியே உங்களையும் உலகம் செய்கிறது என்பதை இனியாவது உணர்ந்துகொண்டிருப்பாயல்லவா! உனக்குப் பேரன் பிறக்கப்போகும் சந்தோஷத்தை இழக்காதே!'' என்று முகத்திலிடித்ததுபோலக் கூறினாள்.

அதே சமயம் ஜானகி வெகு மரியாதையுடனும் சந்தோஷத்துடனும் "மாமீ! நமஸ்காரம். சின்ன மாமீ! நமஸ்காரம்!'' என்று சமத்காரமாகச் செய்து விஜயாளைப் பிடித்துக்கொண்டே நின்றாள். சண்பகவல்லி இதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. தங்கையை யோக க்ஷேமங்கள் விசாரித்தாள். ஒருவரோடொருவர் சீற்றத்தை மறந்து சமரசமாகப் பேசிக்கொண்டே அச்சுதனைத் தடவிக்கொடுத்தார்கள். சந்திராவைத் தட்டிக்கொடுத்தார்கள். ஜானகியும் சந்திராவும் கட்டித்தழுவி "அக்கா! உன் துன்பமும் நிவர்த்தியானதற்கு அளவற்ற சந்தோஷமடைகிறேன். நம்முடைய துன்ப இருள் நீங்கியது. இனி நாம் இன்ப ஜோதியில் துளையும்படிக் கடவுள் என்றும் கிருபை செய்ய வேண்டுகிறேன்.'' என்று கட்டிலடங்காத களிப்புடன் கூறினாள். எல்லோருடைய நிலைமையும் நூதனமாக மாறிவிட்டது. அச்சுதன் எல்லோரையும் தனது புதிய பங்களாவிற்கு அழைத்துச் சென்றான்.

சுகந்தாவும் ரங்கநாதனும் எங்கிருக்கிறார்கள் என்பதை விசாரித்தறிந்துகொண்டு பத்மநாபனும் ஜானகியும் முதலில் அங்கு சென்று அவர்களைக் கண்டு களிப்புடன் தமது வரலாற்றினைக் கூறி அகமகிழ்ந்தார்கள். ஜானகி சுகந்தவல்லியின் அன்பையும் உபகாரத்தையும் மறக்க முடியுமா! அவளால் பேசவே முடியவில்லை. சுகந்தா!

என் வாழ்க்கை இருண்டு அந்தகாரமாயும் பாலைவனம்போலும் போய் விட்டதென்றே நிச்சயித்துவிட்டேன். உன்னாலன்றோ அந்தகாரம் நீங்கி மகிழ்ச்சி மயமானதும் மங்களகரமானதுமான இன்பஜோதி யில் எங்கள் வாழ்க்கை உதயமாகியது. பாலைவனம் பெரிய நந்த வனமாயும் கனியுதவும் பெருந்தோட்டமாயும் மாறியது. உத்தமச் சிநேகிதரென்றால் நீங்களன்றோ உரியவர்கள்'' என்று மெய்ம் மறந்து கூறினார்கள்.

ரங்கநாதனும் சுகந்தாவும் செத்துப் பிழைத்த சந்தோஷத்தை விடப் பன் மடங்கு இப்போது அதிகரித்த சந்தோஷத்தை யடைந்து களித்தார்கள். சுகந்தாவின் சகோதரனுக்கே விஜயவல்லி யின் பெண்ணைக் கல்யாணம் செய்ய ஏற்பாடுகளும் நடந்துவிட்டன. இந்த சம்மந்தத்தை யார்தான் வெறுக்க முடியும்? கூடிய விரைவி லேயே கல்யாணம் முடிந்துவிட்டது.

பின்னும் சில மாதங்கள் சக்கரம்போலச் சுழன்று ஓடி மறைந்து விட்டன. கிழங்களிரண்டும் தம் பேரனைக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டி முத்தமிடும் யுத்தத்தில் போட்டிப்போட வாரம்பித்தார்கள்.

இதைக் கண்ட மகன் பெரிதாக நகைத்துக்கொண்டே ''அம்மா! பேரனுக்கு எத்தனை வரதக்ஷிணையும் சீரும் வாங்கப் போகி றாய்? இப்பொ முதல் லிஸ்டு தயார் செய்ய மறந்துவிடாதே'' என்று குத்திக் காட்டுவான். இதைக் கேட்ட கிழவி ''போடா! போக்கிறிப் பயலே!'' என்று நகைத்துக்கொண்டே பேரனைக் கட்டி முத்தமிட்டு மகிழ்ச்சியில் மூழ்குவாள். அச்சுதனும் அவன் மனைவியும் தேனும் பாலும் போலப் பல சமூகப் படங்களில் நடித்து நற்கியாதி பெற்று அதன் மூலம் சமூக சேவை செய்வதில் பின் வாங்கவே இல்லை. இரு குடும்பங்களும் இன்பஜோதியாக விளங்கிப் பிரகாசிப்பதைக் கண்டு உலகமே வியந்தது என்றால் அதைவிட ஆநந்தகரமான வாழ்க்கை யும், சந்தோஷமும் வேண்டுமா! குறைவிலா ஆநந்தம் நிறைவிலாது பொங்குக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சுபம். சுபம். சுபம்.

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

26¼ ரூபாய்க்கு
31 நாவல்கள்.

"ஜகன்மோகினி", சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.		ரூ.	அ.
வைதேகி (2-பாகங்கள்)	2	8	...	2	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	...	2	0
சாருலோசனா	2	8	...	2	0
பத்மசுந்தரன்	2	8	...	2	0
காதலின் கனி	2	8	...	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	...	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	...	1	12
சாமளநாதன்	2	0	...	1	12
தியாகக்கோடி	2	0	...	1	12
மங்களபாரதி	2	0	...	1	12
சண்பகவிஜயம்	1	12	...	1	8
கௌரீமுகுந்தன்	1	12	...	1	8
ஸாரமதி	1	12	...	1	8
சோதனையின் கொடுமை	1	8	...	1	4
உரிமளகேசவன்	1	4	...	1	0
பத்தமசீலன்	1	4	...	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	...	0	14
கதம்பமாலை	1	0	...	04	1
புத்தியே புதையல்	0	14	...	0	12
கோபாலரத்னம்	0	14	...	0	12
பட்டமோ பட்டம்	0	10	...	0	8
நளினசேகரன்	0	8	...	0	6
வீரவஸந்தா	0	8	...	0	6
மூன்று வைரங்கள்	0	8	...	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	...	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	...	0	6
பக்ஷமாலிகா	0	6	...	...	
ஜெயஸஞ்ஜீவி	0	4	...	...	
சுகுணபூஷணம்	0	4	...	...	
அம்ருததாரா	0	4	...	...	

ரூ 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் முழு விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு திருவல்லிக்கேணி, சென்னை.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.

இன்ப ஜோதி

அல்லது

பிள்ளை வீட்டாரின் கொள்ளை

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது.

பிரசுராலயம்:

"ஜகன்மோகினி" ஆபீஸ்.,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

1936

காபிரைட்]

[விலை ரூ. 1/4.

அட்டவணை.

அதிகாரம்.		பக்கம்.
1.	பிடாரிகளின் பேயாட்டம்—தலைவனின் திண்டாட்டம்...	1
2.	சீர்வகைகளின் அடுக்கு—சம்மந்திகளின் முடுக்கு ...	8
3.	பேய்களின் சாகஸம்—பெருந்துயர் சாகரம் ...	19
4.	மதுர கானம்—இதயக் குழப்பம்	33
5.	காசி யாத்திரை வைபவம்—மோசம் போன பரிபவம் ...	44
6.	அன்பின் அருணோதயம்—அன்பர்களின் இன்ப இதயம்.	49
7.	மூர்க்கருடன் வாழ்க்கை முள்ளினும் கொடிதே	59
8.	நேசர்களின் அன்பு—மாசற்ற இன்பம்	65
9.	அலை காற்றிலகப்பட்ட நிலையற்ற தோணி	78
10.	சந்தோஷக் களிப்பு—சங்கடத் திகைப்பு... ...	87
11.	பூ பட்ட கண்ணில் புண்ணும் கிளம்பியது.. ...	97
12.	மொடா விழுங்கி ஆசாமிக்கு ஊர் விழுங்கி துணை ...	105
13.	கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்	118
14.	அபலையின் தவிப்பு—சபதத்தின் சிறப்பு ...	128
15.	மாயா ஜாலத்தில் மயங்கிய பேய்கள்	145
16.	மனோதிட மாட்சி—வினோதக் காட்சி	155
17.	குருவிக்கார ஆட்டமும், குள்ள நரி வேட்டையும்	161
18.	வாழ்க்கையின் சோதனை—வனிதையின் வேதனை ...	171
19.	படக்காட்சிச் சாலை—இடர் கொய்யும் வேளை ...	184
20.	வீராங்கனையின் தீரம்—பேராசை பெரு நஷ்டம் ...	193
21.	அதிர்ஷ்ட தேவதையின் அதிசய ப்ரவேசம் ...	202
22.	வித்தைக்குள் வித்தை—விசித்திர சம்பவம் ...	213
23.	த்ரிசங்குச் சொர்க்கம்—தீர நடிக சிங்கம்... ...	226
24.	மங்களத் தோற்றம்—மங்கையர் ஏற்றம் ...	233

புதிய சந்தா நேயர்களுக்கு

அரிய சந்தர்ப்பம்.

சென்ற ஆண்டில் வெளியான மூன்று அதியற்புதமான
நாவல்களைப் படித்தீர்களா ?

பொங்கும் காதல்
அல்லது
மங்களபாரதி

பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்

இல்லையேல், ரூ. **1-8-0** முன்பணமனுப்பி மிகவும் குறைந்த (சந்தா) விலையில் உடனே பெற்றுக் கொள்ளுங்கள். **சோற்ப காபிகளே கைவசமிருப்பதால் முந்துங்கள்.**

"ஜகன்மோகினி" அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி

அரிய சந்தர்ப்பம் ! விசேஷ சலுகை !!

காலஞ்சென்ற பண்டித திரு. ராகவாசாரியார்
இயற்றிய நூல்கள்

		ரூ.	அ.
1.	துருவ வெண்பா	0	8
2.	சம்பு ராமாயணம்	0	10
3.	நீதி மஞ்சரி	0	5
4.	திருமால் வெண்பா	0	4
5.	சிவபிரான் துதி	0	3
6.	ராஜராஜேசுவரி	0	2
		2	0

சந்தா நெ. குறிப்பிட்டு ஆர்டர் செய்யும் அன்பர்களுக்கு மேற்கண்ட புத்தகங்களையெல்லாம் ஒரே காலத்தில் வாங்கினால் ரூ. 1-8-0க்குக் கொடுக்கப்படும். தனித்தனியாக வாங்குவதனால் தபால் செலவு இனம்.

வி. பி. கிடையாது. முன்பணம் தான் அனுப்பவேண்டும்.

விலாசம்:- ஜி. ஆர்.
C/o "ஜகன்மோகினி"
திருவல்லிக்கேணி.

"லக்ஷ்மி"

ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.

எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்
மாதம் ஒரு முறை வெளிவரும்.

பெண்களும், குழந்தைகளும், ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 0 0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 8 0

மானேஜர், **"லக்ஷ்மி" ஆபீஸ்,** திருநெல்வேலி ஜங்ஷன்.

“ஜகன்மோகினி” ஆபீஸ், திருவல்லிக்கேணி.

சங்கு நூல்கள்

மகாத்மா காந்தி எழுதிய

	ரூ.	அ.
சத்திய சோதனை I	1	8
ஷை II	2	0
இல்லறமும் பிரம்மசரியமும்	0	6
அனாசக்தியோகம்	0	4
ஆரோக்கிய வழி	0	4
மகா தியாகம்	0	4
நீதி தருமம்	0	2
கீதாபோதனை	0	2
உத்தம வாழ்க்கை	0	2
ஹிந்து தர்மம்	0	2

ரோமேன் ரோலண்டு எழுதிய

மகாத்மா காந்தி (புதிய பதிப்பு)	0	4

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் எழுதிய

ஆறடி நிலம்	0	4

மகாதேவ தேசாய் எழுதிய

	ரூ.	அ.
பர்டோலிக் கதை	0	12

வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

இல்லற மகா ரகஸியம்	0	4

பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான

இந்தியாவின் கடன் பொறுப்பு	0	4

க. சந்தானம் எழுதிய

சத்திய சமாஜம்	0	4

வ வே. ஸு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின் காதல் கதைகள்	0	8

குருகோவிந்தசிங்

சீக்கியர்களின் வீரத்தலைவன்	0	12

பாரதியார் நூல்கள்

கதைக் கொத்து

இதில் பாரதியார் தன் சொந்த அனுபவங்கள், அபிப்பிராயங்கள், இன்னும் நமது மடமை, மூடபக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவை போன்ற ஸமுதாயவாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையையெடுத்துரைக்கிறார். எளியதமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 8

பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான முன்னுரையும் அடங்கியது. காலிகோ பைண்டு அணா 12

ராப்பர் பைண்டு	,,	8
பாகெட் கீதை (தமிழுரையுடன்) காலிகோ	,,	7
பாகெட் கீதை தமிழுரையுடன் ராப்பர்	,,	5

வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கி யுள்ளன. ரூபா. 2-0-0

கவிதைகள்

தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன

ரூபா. 2-8-0

கட்டுரைத் தொகுதிகள்

தத்துவம்	அணா.	10
மாதர்	,,	8
கலைகள்	,,	8

"வர்த்தக ஊழியன்"

வர்த்தக முன்னேற்றத்தைக் கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை

இந்தியா, இலங்கை, பினாங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள பிரபல வர்த்தகர்களாலும், மற்றும் பல பொது மக்களாலும் உலகத்தில் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு, பிரதி ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பல ஆயிரக் கணக்கான இதழ்களுடன் வெளிவருவது.

வர்த்தக ஊழியனில்

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத கட்டுரைகள், சாமான்களுக்கு ரெயில்வே கட்டணங்கள், வர்த்தகத் துணுக்குகள், அன்னிய நாட்டு வர்த்தக விஷயங்கள், தொழில் அபிவிருத்தி, வர்த்தகக்குறி வழக்கு முதலிய பலபல விஷயங்கள் வெளிவரும். மதிப்புரைக்காக பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

வர்த்தக ஊழியனில்

விளம்பரம் செய்வதினால் தக்க லாபத்தை அடையலாமென்பது திண்ணம். குறைந்த செலவில் நிறைந்த லாபத்தையடைய விரும்பினால், வர்த்தக ஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா உள் நாட்டிற்கு ரூ. 1 வெளி நாட்டிற்கு ரூ. 1-8-0

மானேஜர், வர்த்தக ஊழியன், திருச்சினாப்பள்ளி.

நீங்கள் இதைப் படித்ததுண்டா?

குறைந்த சந்தா! நிறைந்த செய்தி!

"சித்தன்"

ஓர் உயரிய நவீன மாதப் பத்திரிகை.

ஆசிரியர் டாக்டர் C. P. சாமி.

இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதாரம், வைத்தியம் முதலிய விஷயங்களையும், அறிவு வளர்ச்சிக்கேதுவான பல கட்டுரைகளையும், இன்பக்கதைகள், உலக அதிசயங்கள், பெரியாரின் ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண் மக்கள் பகுதி, நாடகம், சினிமா இன்னும் பல அரிய விஷயங்கள் பொதிந்து வெளிவருகிறது.

வருட சந்தா அணா 0-8-0 தனிப்பிரதி அணா ஒன்று

மானேஜர், "சித்தன்" பழனி. S. 1.

அம்ருத தாரா

அல்லது

அதிசய சம்பவம்

வை.மு.கோதைநாயகி அம்மாள்.

வெளி வந்து விட்டன

சில வருஷங்களாக நமது கைவசமில்லாததால் நீங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இரண்டு அற்புதமான துப்பறியும் நாவல்கள்.

ராதாமணி ரூ. 2-8. சந்தா நேயர்களுக்கு ரூ. 2.

காதலின் கனி ரூ. 2-8. சந்தா நேயர்களுக்கு ரூ. 2.

ரூ. 3-8-0. முன் பணம் அனுப்புவோருக்கு இரண்டு நாவல்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

புதிய சந்தா நேயர்களுக்கு

அரிய சந்தர்ப்பம். — சஞ்சிகை விலை. — உடனே முந்துங்கள்.

தேச பக்தி ததும்பும் நாவல்கள்.

		ரூ.	அ.	பை.
சாரமதி	...	0	14	0
நளினசேகரன்	...	0	4	0
துப்பறியும் நாவல்.				
தியாகக் கொடி	...	1	2	0
புத்தியே புதையல்	...	0	6	0
மங்களபாரதி	...	1	0	0
பிச்சைக்காரக் குடும்பம்	...	0	4	0
ஆனந்தஸாகர்	...	0	4	0

சஞ்சிகை ரூபமாக சொற்ப காபிகளே கைவசமுள்ளன.

"ஜகன்மோகினி" ஆபீஸ்

திருவல்லிக்கேணி.

Devi Press, Madras.

தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.